விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 13 புதன்கிழமை (25.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 068

# புதுக்குடியிருப்பு பகுதியில் படையினர்-புலிகள் கடும் சமர்

## நகருக்குள் நுழைந்துள்ளதாக படையினர் அறிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் படையினரின் அதிசிறப்பு படையணிகள் பல முனைகளில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் உக்கிர சமரில் ஈடுபட்டுள்ளதாகவும் எனினும் படையினர் புதுக்குடியிருப்பு நகருக்குள் பிரவேசித்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)



வன்னியில் நேற்று இடம் பெற்ற ஷெல் தூக்குதலில் படு காயமுற்ற சிறுமியை அவரது தந்தை தூக்கிச் செல்வதைப் படத்தில் காணலாம்.

## பருத்தித்துறைக் கடலில் குண்டுச் சத்தங்கள்

(பருத்தித்துறை)

வடமராட்சி பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று மாலை குண்டுச் சத்தங்கள் கேட்டதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

மாலை 6.00 மணி முதல் சுமார் 30 நிமிட நேரம் குண்டுச் சத்தங்களை கேட்கக் கூடியதாக இருந்தது.

எனினும் இச் சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் எவையும் வெளியாக வில்லை. (எ-10)

## பஸ் - மோ.சைக்கிள் விபத்து சிறுமி பலி; தந்தை படுகாயம்

(காரைநகர்)

காரைநகர் புதுறோட்டில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் சிறுமி ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அவரது தந்தை படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

காரைநகர் புதுறோட்டில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மோதியதில் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் தனது தந்தையுடன் சென்று கொண்டிருந்த சிவநேசன் டிலானி (வயது 5) என்ற சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது தந்தையான காரைநகர் ஆ.தியாகராஜா மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு ஆசிரியர் வேலுப்பிள்ளை (12ஆம் பக்கம் பார்க்க)


## அரச தூதுக்குழு ஜெனீவா விஜயம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றுவரும் யுத்த நடவடிக்கைகள் குறித்தும், இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளை பாதுகாக்க முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் இலங்கை விளக்கமளிக்கவுள்ளது.

இதனையொட்டி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையிடம் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா மீது தாக்குதல் நடத்தும் பலம் விடுதலைப் புலிகளிடமுள்ளது



### எச்சரிக்கிறார் இராணுவத் தளபதி

(கொழும்பு)

இலங்கை பாதுகாப்புத் தரப்பினரால் தாக்கப்பட்டிருக்கும் விடுதலைப்புலிகள் இந்தியா மீது குறிவைக்க முயற்சிக்கலாம் என இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தென்னிந்தியாவின் பொருளாதார மையங்கள் மற்றும் பொதுமக்கள் மீது இலக்குவைத்துத் தாக்குதலை நடத்த முடியும் என இந்திய ஊடகம் ஒன்றுக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## விமான,ஷெல் தாக்குதல்களில் நேற்று 21 பொது மக்கள் பலி

### 53 பேர் படுகாயம்

(கொழும்பு)

வன்னியில் நேற்று நடத்தப்பட்ட பீரங்கி மற்றும் வான் தாக்குதல்களில் 21 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 53 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

மாத்தளன் மருத்துவமனைக்கு அருகிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்றுக்காலை 5 மணியளவில் பீரங்கிகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதில் 5 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 21 பேர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலின்போது மருத்துவமனையின் சுவர் மற்றும் கூரை என்பன சேதமாகின. கிருசாந்தன் (வயது 17), இயலவன் (வயது 11), ப.கமலேஸ்வரி (வயது 40), ப.தேசிகன் (வயது 7),த.ஶ்ரீ (வயது 43), க.லவன் (வயது 13), ஜெ.பார்த்தீபன் (வயது 20) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் மேற்கொண்ட தாக்குதலில் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலுள்ள மக்களைப் பாதுகாக்குமாறு ஐ.நா.,அமெ. மற்றும் இந்தியா கோரிக்கை

இலங்கையில் தொடரும் போர் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வந்து இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா மற்றும் இந்தியா மீண்டும் ஒரு முறை கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சினை அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்படவேண்டுமென அவை தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கு இடையிலான மோதல்கள் நிறுத்தப்பட்டு பொதுமக்கள் வெளியேறுவதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் பொதுமக்களின் உயிர்களைப் பலிகொடுக்காமலும் இலங்கையிலுள்ள இனங்களை அழிக்காமல் உடனடியாக மோதல்கள் நிறுத்தப்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என மூன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மோதல்களால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது அதிகரித்துச் செல்வது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை கவலையடைவதாகக் குறிப்பிட்டிருக்கும் பான்கீ மூன், மோதல்கள் நிறுத்தப்பட்டு பொதுமக்கள் வெளியேற்றப்படுவதற்குத் தமது பலமான ஆதரவு இருக்கும் எனக் கூறியுள்ளார்.

எனினும், போர் நிறுத்தமென்ற வார்த்தையை ஐ.நா. செயலாளர் நாயகம் பயன்படுத்தவில்லையென (12ஆம் பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் கட்சியின் ஏற்பாட்டில் ஈழத்தமிழர்களுக்கு நிவாரண உதவி

## சோனியா காந்தி அறிவிப்பு

இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரண பொருட்களை அனுப்ப காங்கிரஸ் கட்சியினருக்கு சோனியா காந்தி உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை தமிழர்களை பாதுகாக்க வேண்டும், இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் தமிழ் நாட்டில் போராட்டம் நடத்தி வருகின்றன.

இந்நிலையில் இலங்கை தமிழர்களுக்கு காங்கிரஸ் ஆதரவாக இல்லை என்பது போன்று சிலர் பிரசாரம் செய்து வருகிறார்கள். இதுபற்றி காங்கிரஸ் மேலிடத்துக்கு தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் இலங்கை தமிழர்களுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்ப காங்கிரஸ் முடிபு செய்துள்ளது.

ஏற்கனவே தமிழக அரசு சார்பில் இலங்கை தமிழர்களுக்காக நிவாரண நிதி திரட்டப்பட்டு, அதன்மூலம் இலங்கை தமிழர்களுக்கு உணவு, மருந்து, உடை மற்றும் அத்தியாவசிய பொருட்கள் அனுப்பப்பட்டன. மத்திய அரசும் மருந்து மற்றும் நிவாரண பொருட்களை இலங்கை தமிழர்களுக்காக அனுப்பி வைத்தது.

இப்போது காங்கிரஸ் கட்சி சார்பில் இலங்கை தமிழர்களுக்கு நிவாரண உதவி வழங்க முடிபு செய்யப்பட்டுள்ளது. தமிழக காங்கிரஸார் இலங்கை தமிழர்களுக்காக நிவாரணப் பொருட்களை திரட்ட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உத்தரவிட்டுள்ளார். இது பற்றி தலைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர்களுக்காக திரட்டப்படும் நிவாரணப் பொருட்கள் வெளியுறத்துறை அமைச்சகம் மூலம் இலங்கைக்கு அனுப்பப்படுகிறது. அவை பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நேரடியாக வழங்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விரைவில் தமிழ் நாட்டில் இலங்கை தமிழர்களுக்காக காங்கிரஸார் நிவாரணப் பொருட்களை திரட்டத் திட்டமிட்டுள்ளனர். (ச)


## டி.ராஜேந்தர் தலைமையில் புதிய இயக்கம் ஆரம்பம்

(சென்னை)

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக போராட தமிழ் இன பாதுகாப்பு முன்னணி என்ற புதிய இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக டி.ராஜேந்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கவிஞர் புலமைப்பித்தன், நடிகர் மன்சூர் அலிகான், சக்திவேல், வேலுச்சாமி ஆகியோர் பொறுப்பாளர்களாக உள்ளனர்.

தமிழ் எழுத்தாளர்கள், உணர்வாளர்கள் ஒன்று சேர்ந்து இந்த புதிய இயக்கத்தை உரு வாக்கி உள்ளோம். இலங்கையில் அழிக்கப் படும் தமிழ் இனம் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழீழம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நோக்கம் என்கிறார்கள் தமிழ் இன பாதுகாப்பு முன்னணியினர். (ச-5)



காரைநகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்த சிறுமியின் சடலம்.

## பூசா சிறையில் உள்ளவர்களின் விபரங்கள் நேரில் சென்று சேகரிப்பு

### தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவிப்பு

(கொழும்பு)

பூசா சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு; இனந்தெரியாத ஆயுததாரிகளால் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் சம்பந்தமாக அவர்களது உறவினர்கள் மூலமாக எமக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் பணிப்பின் பேரில் அவரின் செயலாளர் இரா.சங்கையா தலைமையில் கடந்த ஒருமாத காலமாக எமது குழுவினர் சில இடங்களைப் பார்வையிட்டுள்ளனர். அதன்படி சில தகவல்களும் பெறப்பட்டுள்ளன. அதனடிப்படையில் கடந்த 20.02.2009 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப்பிரிவில் தடுத்துவைக்கப்பட்டு பூசா சிறையில் உள்ளவர்களையும் பார்வையிட்டு விபரங்களைச் சேகரித்து வந்துள்ளனர். பூசாவில் உள்ளவர்கள் குறிப்பாக பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகிறார்கள். ஒரு சில வய்தான தாய்மார்கள், கைக்குழந்தையுடன்இருக்கும் பெண்கள், நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்கள் போன்றவர்களின் நிலை பரிதாபகரமானதாகவே காணப்படுகின்றது. இவ்வாறானவர்களின் விசாரணையை துரிதமாக முடித்து அவர்களை விடுதலை செய்வதற்காக சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தலைவர் வீ.ஆனந்தசங்கரி கேட்டுக்கொண்டார்.

எமது குழுவினரின் அறிக்கைகளையும் கோரிக்கைகளையும் பார்த்தும் கேட்டும் தெரிந்துகொண்ட எமது தலைவர் கௌரவ வீ.ஆனந்தசங்கரி மிகவிரைவில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களை சந்தித்துச் சிறையில் இருப்பவர்களின் விடுதலைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையினை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

மேலும் எமது குழுவினர் காணாமல் போனவர்கள் சம்பந்தமாக இன்னும் சில இடங்களை பார்வையிட உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கீழே பெயர் குறிப்பிட்டவர்களின் உறவினர்கள் யாராவது இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சிவபாதசுந்தரம் சோபனா-சுண்டிக்குளம் 40ஆம் வாய்க்கால் பிரமந்தனாறு விசுவமடு, வேலன் முருகுப்பிள்ளை-12 கட்சன் வீதி வட்டக்கச்சி, இராசரத்தினம் அற்புதமலர்-தேவன்பிட்டி வெள்ளாங்குளம் புதுக்காடு மன்னார், ஜெகதீஸ்வரன் ஜெயதரன்-அடம்பன் மன்னார், அருமைநாதர் குகதர்சினி-வைரவர் கோவிலடி கண்டி வீதி பரந்தன், இராசலிங்கம் வளர்மதிகார்த்திகா - 137 உதயநகர் கிளிநொச்சி, பாஸ்கரன் சிவசக்தி அருட்செல்வராணி- 57 கல்விளான் துணுக்காய், த.சுபாசினி - இணுவில் தெற்கு இணுவில், கணேசலிங்கம் 566-7ஆம் யுனிற் இராமநாதபுரம் வட்டக்கச்சி, சிவனடியான் குகராஜ்- அளவெட்டி தெற்கு அளவெட்டி, மகேந்திரன் மதனகுமார் - உக்கிலாங்குளம் வவுனியா, கந்தசாமி யசிந்தன் - வரணி யாழ்ப்பாணம், ஜெயராசா அசோக்குமார் - பாசையூர் யாழ்ப்பாணம், பூபாலசிங்கம் கபிலன்-புத்தூர் கிழக்கு புத்தூர், சண்முகநாதன் சதீஸ்கரன்-இணுவில் கிழக்கு இணுவில், பஸ்டியான் தினேஸ் - நாவலர் வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம், இராசலிங்கம் சந்திரமோகன் -உடபுஸ்ஸல்லாவ, அய்யாத்துரை முருகஜோதி-வேப்பங்குளம் வவுனியா, கிருஷ்ணப்பிள்ளை சந்திரமோகன்-கல்லப்பாடு முல்லைத்தீவு, அரியதாஸ் சிவாஜினி - உரும்பிராய் கிழக்கு உரும்பிராய்.

தொடர்புகளுக்கு 30/01பி, அல்விஸ் பிளேஸ், கொழும்பு-3.

தொலைபேசி:0112347721, 077-2487339 என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## ஊடகக் கல்வி அறிமுக விழா

(காரைநகர்)

காரைநகர் ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தின் ஊடகக் கற்கை நெறி அறிமுக விழா இன்று காலை 8.30 மணிக்கு அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் போஜோ-டென் மார்க் அரச ஊடக ஆலோசகர் கலாநிதி ஹென்றிக் குறூநெற் பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையப் பணிப்பாளர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர். (ச-246)

## ஊடகமன்றத்தின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரி ஊடக மன்றத்தின் பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 1.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் போஜோ-டென்மார்க் அரசாங்க ஊடக ஆலோசகர் கலாநிதி ஹென்றிக் குறூநெற் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையப் பணிப்பாளர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்கிறார். (ச)

## திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிரிப்பைச் சித்திரிக்கும் மாபெரும் தயாரிப்பாகிய திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளான இன்று மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வரும் அஞ்சனந்தாழ்வு பங்குத்தந்தையுமான அருள்திரு. ஜே.நீக்கிலஸ் அடிகளார் இவ் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்களுக்கான பிரதிகளை வழங்கிச் சிறப்பிக்கவுள்ளார்.

இவ்வாண்டு ‘கல்வாரி யாகம்’ என்னும் பெயரில் திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் மார்ச் 30, 31 மற்றும் ஏப்ரல் 01, 02, 04, 05 ஆகிய திகதிகளில் மேடையேற்றப்படவுள்ளது. (ச)

## ஓய்வு பெற்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் கணிதபாட ஆசிரியர்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். கல்வி வலய கணித ஆசிரியர் கழகத்தினால் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலய ஆசிரியர் எஸ்.திருச்செல்வன், நல்லூர் இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் ஆர்.திருச்செல்வம்,கோப்பாய் மகாவித்தியாலய ஆசிரியர் எம்.சுப்பிரமணியம், கொக்குவில் ஞானபண்டித வித்தியாலய ஆசிரியர் கே.மகாலிங்கம், அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய ஆசிரியர் கே.மனோறஞ்சன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ச-14)

## மூலிகை தொடர்பான கருத்தரங்கு

குணப்பாடப் பிரிவு சித்த மருத்துவத் துறையினால் நடத்தப்படும் பாடசாலை மாணவர்களிற்குரிய மூலிகைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு தொடரானது,

இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் காலை 11.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை நடைபெறவுள்ளது. (ச)

## நாரந்தனை கடற்றொழிலாளர்களுக்கு சகல வசதியும் கொண்ட கட்டிடம்

(யாழ்ப்பாணம்)

தீவகம் நாரந்தனை வடக்கு பகுதியில் உள்ள கடற் தொழிலாளர்களுக்கு அனைத்து வசதிகளையும் கொண்ட கட்டிடத்தொகுதி ஒன்றினை 30 லட்சம் ரூபா செலவில் புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் நிர்மாணித்துக் கொடுக்கவுள்ளது.

நாரந்தனை வடக்கு, தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மீனவர் இளைப்பாறும் மண்டபம், மீன்களை பாதுகாக்கும் அறை, மலசல கூடவசதி அடங்கலான கட்டிடத் தொகுதிப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் மார்ச் மாதப் பகுதியில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கட்டிடத்துக்கான அனைத்துப் பணிகளும் பூர்த்தியடைந்த நிலையில் மின் இணைப்பு, நிறப்பூச்சு வேலைகள் தற்போது இடம் பெற்று வருவதாக நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## கைமாறும் கருத்துக்கள்

ஒரு ராஜா இருந்தார். மிகவும் நேர்மையானவர். கண்டிப்பானவர்.

தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை கொடுப்பார். வேண்டியவர்களுக்கு ஒரு நியாயம், வேண்டாதவர்களுக்கு ஒரு நியாயம் என்பதெல்லாம் அவரிடம் கிடையாது.

ஒரு சமயம் அரசவையில் அமைச்சர் விதிமுறைகளுக்குப் புறம்பாக நடந்து கொண்டார். மன்னருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே அமைச்சரைக் கூப்பிட்டு கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டார்.

உடனே அந்த அமைச்சர் என்ன செய்தார் தெரியுமா? நேராகப் போய் அங்கு நின்று கொண்டிருந்த இன்னொருவர் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். அறைவாங்கியவர் திகைத்துப் போனார். இவர் ஏன் நம்மை வந்து அறைந்தார் என்று யோசித்தார். மன்னரும் திகைத்துப் போனார்.

நாம் இவரை அறைந்தால் அதற்காக இவர் போய் இன்னொருவரை அறைய வேண்டுமா? என்று யோசித்தார்.

அமைச்சரைக் கவனித்தார். அவர், தான் அறைந்தவரைப் பார்த்துக் கத்திக் கொண்டே இருந்தார். "ஏனப்பா... என்னிடம் அறை வாங்கிவிட்டு இப்படி விவரமில்லாமல் நிற்கிறாய்? உனக்கு கொடுத்ததை நீ வேறு யாருக்காவது கொடுத்துவிடு" என்றார்.

உடனே அந்த ஆள் பார்த்தான். தனக்கருகில் நின்று கொண்டிருந்தவனை ஓங்கி அறைந்தான். அவன் கன்னத்தைத் தடவிக்கொண்டே யோசித்தான். ஏதோ புரிந்து கொண்டது போல் தனக்கு அடுத்ததாக நின்று கொண்டிருந்தவனை அறைந்தான்.

இப்படி அந்த அறை மாறி மாறி போய்க்கொண்டே இருந்தது.

அன்றிரவு ராஜா தூங்குவதற்காக சென்றார். அந்த நேரம் அவர் கன்னத்தில் 'பளார்' என்று ஒரு அறை விழுந்தது. நம்மையே அறைவது யார் என்று அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தார் மன்னர். அறைந்தது அவருடைய மனைவி.

"என்ன ஆச்சு உனக்கு?" என்றார்.

"உங்களுக்குத் தெரியாதா? ஊர் முழுவதும் ஒருவரை மாற்றி ஒருவர் மூலமாக இந்த அறை பிரயாணம் செய்து கொண்டு வருகிறது" என்றார் அவர்.

"அப்படியானால் ஆரம்பித்த இடத்திற்கே வந்துவிட்டதா?" என்றார் மன்னர்.

"என்ன சொல்றீங்க?" என்றார் மனைவி. இவர் விபரத்தைக் கூறியதும், "அப்படியானால் நீங்கள் ஆரம்பித்து வைத்த இந்த விளையாட்டை நான் முடித்து வைத்து விட்டேன்" என்றார்.

மறுநாட்காலை அரசவை கூடியது.

அமைச்சர் மன்னரைப் பார்த்து, "என்ன மகாராஜா! என்னிடம் கொடுத்ததை திரும்ப வாங்கிக் கொண்டீர்களா?" என்றார். "இப்படி நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை" என்றார் மன்னர்.

"ஆனால் நான் எதிர்பார்த்தேன். அது எங்கே போய் விடப் போகிறது. ஊர் சுற்றி கடைசியில் உங்களிடம் தான் வந்து சேரும் என்று எனக்குத் தெரியும்" என்றார் அமைச்சர்.

இந்தக்கதை வேடிக்கையாக இருந்தாலும் இதிலுள்ள கருத்து முக்கியமானது.

இந்த உலகத்தில் பல கருத்துக்கள் இப்படித்தான் கைமாறி சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

நம்ம ஆள் ஒருவன் தன்னுடைய நண்பனை கடை வீதியில் சந்தித்தான். உடனே ஓடிப்போய் அவன் கன்னத்தில் பளார் என்று அறைந்தான். அவன் கன்னத்தை தடவிக் கொண்டே, "ஏன் என்னை அறைந்தாய்?" என்றான்.

"நீ ஏன் என் மனைவியிடம் என்னை ஒரு முட்டாள் என்று சொன்னாய்?" என்றான்.

"உன்னை ஒரு முட்டாள் என்று சொன்னதற்காகவா அறைந்தாய்?" என்று கேட்டான் இவன்.

"அதற்காக அறையவில்லை. அந்த இரகசியத்தை நீ ஏன் எங்கள் வீட்டில் போய் சொன்னாய்?" அதற்காகத் தான் அறைந்தேன் என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்ததும் புதிய சம்பள சுற்று நிருபம் வெளியிட ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவிருக்கின்றது.

அதற்கான ஏற்பாடுகளை கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த விடுத்த அறிவுறுத்தலுக்கமைய கல்வியமைச்சு மேற்கொண்டு வருகிறது.

கல்விசார், ஆசிரிய தொழிற்சங்கங்கள், உயர் நீதிமன்றில் கொடுத்த SCFR / 282 / 2008 ஆம் இலக்க வழக்கின் தீர்ப்புப் பிரகாரம் ஆசிரியர்களின் சம்பளத்தில் நிலவும் முரண்பாடுகள் களையப்பட்டு சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

இச்செய்தி கல்வியமைச்சினால் இணையத்தள ஊடக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிருவாக அமைச்சின் 06/2006 ஆம் இலக்க சுற்று நிருபத்தை மையமாக வைத்து புதிய சம்பளத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொது நிருவாக அமைச்சு இதற்கென புதிய சுற்று நிருபமொன்றை வெளியிடும்.

அச்சுற்று நிருபத்தை தயாரிப்பதில் தேசிய சம்பள ஆளணி ஆணைக் குழுவும் பொது நிருவாக அமைச்சும் ஈடுபட்டிருந்தன.

பிரஸ்தாப சுற்று நிருபத்தின் பிரதி; பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் புதிய சம்பள சுற்று நிருபம் வெளியிடப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது நிருவாக அமைச்சின் 6/2006 ஆம் இலக்க சுற்றுநிருபத்தை மையமாக வைத்து தயாரிக்கப்பட்ட புதிய சுற்றுநிருபத்தை அவ்வமைச்சே வெளியிடும்.

அச்சுற்று நிருபம் வெளியாகும் பட்சத்தில் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு நீக்கப்பட வாய்ப்புண்டு எனக் கூறப்படுகிறது. குறிப்பாக ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

கல்வியமைச்சு மீது கடந்த 02 வருடகாலமாக கல்விசார் தொழிற்சங்கங்கள் மேற்படி ஆசிரியர்களது சம்பள முரண்பாடு தொடர்பாக பல அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தன.

பொதுப் பரீட்சைகளின் விடைத்தாள் மதிப்பீடு பல தடவைகளில் சிக்கலுக்குள்ளானமையும் இதன் பிரதிபலிப்பே எனலாம்.

இவ்வாறு நீண்டநாள் நிலவி வந்த ஆசிரியர்களது சம்பள முரண்பாடுகள் விரைவில் தீர்த்து வைக்கப்படலாமென நம்பப்படுகிறது. (ஓ-5)

# மாகாண மட்ட ஆக்கத்திறன் போட்டியில் சிந்மயபாரதி மகாவித்தியாலய மாணவி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட பாடசாலைக் கல்வி மென்பொருள் ஆக்கத்திறன் போட்டியில், சுதுமலை சிந்மய பாரதி மகாவித்தியாலய மாணவி யோகநாதன் கௌதமி மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

கல்வி அமைச்சின் இடைநிலைக் கல்வி நவீன மையச் செயற்றிட்டத்தின் கீழ் மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பத்திறனை வளர்க்கும் நோக்கில் நடத்தப்பட்ட இப்போட்டிகள் தரம் 1 முதல் 8 வரை, 9 முதல் 11 வரையும், 12 முதல் 13 வரையும் என மூன்று பிரிவுகளாக இடம்பெற்றன.

இப்போட்டியில் தரம் 9 முதல் 11 வரையான பிரிவில் சுதுமலை சிந்மய பாரதி மகாவித்தியாலய மாணவியான யோகநாதன் கௌதமி மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை இதே பாடசாலையில் அதே பிரிவில் எழாமிடத்தினை ம. சௌமியாவும் எட்டாம் இடத்தினை அ. குயிலினியும் பெற்றுள்ளனர்.

இதற்கான பரிசளிப்பு விழா இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற போது முதலிடத்தைப் பெற்ற மாணவிக்கு ரூபா 10 ஆயிரம் பணப் பரிசிலும் நினைவுக் கேடயமும் வழங்கப்பட்டன.

பின் தங்கிய சுதுமலைக் கிராமத்தில் அமைந்துள்ள சிந்மய பாரதி வித்தியாலயம் பெருமளவிலான பௌதீக வளங்களைக் கொண்டிராத போதிலும், மாணவி இத்தகைய சாதனையைப் புரிந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-5)



கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் தரம் ஒன்று மாணவர்களுடன் பாடசாலை அதிபர் சி. சோமசுந்தரம், பிரதம விருந்தினர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

25.02.2009
(மாசி 13, புதன்கிழமை)
அமாவாசை முற்பகல் 7.36 மணிவரை
சதயம் முன்னிரவு 9.29 மணிவரை
இராகுகாலம் 12.29 - 1.59 மணிவரை.
சுபநேரம் 4.59-6.29 மணிவரை
தவக்காலம் ஆரம்பம்
விபூதிப்புதன்

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, உடல் நலம். |
| இடபம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, பிறர் உதவி, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | புதிய திட்டமிடல், உடல் உழைப்பு, பெரியோர் சந்திப்பு, பிரயாணம். |
| கடகம் | வீண் தொல்லை, காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, பணக் குறைவு. |
| சிங்கம் | நல்ல வரவேற்பு, தேகநலன், போசனசுகம், பிரயாண நன்மை. |
| கன்னி | நோய் குணமடைதல், சத்துரு ஜெயம், திடீர் பயணம், சுப செய்தி. |
| துலாம் | வியாபார விருத்தி, குடும்பக் கவலை, கௌரவக் குறைவு, பணவிரயம். |
| விருச்சிகம் | அற்பர் நேசம், நல்ல முயற்சி, சுப செலவு, ரோக பயம். |
| தனுசு | கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, பிரயாண சுகம், உறவினர் வருகை. |
| மகரம் | விதண்டாவாதம், காரிய இடையூறு, பண விரயம், குடும்பக் கவலை. |
| கும்பம் | கற்பனை மிகுதி, புதிய முயற்சி, நண்பர்கள் உதவி, சயன சுகம். |
| மீனம் | காரிய அலைச்சல், தந்தைவழி உறவு, சயன சுகக் குறைவு, தனவிரயம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 100 | 100-120 |
| தக்காளி | 60 | 60 |
| அவரை | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 |
| கோவா | 50 | 50 |
| கரட் | 60 | 60 |
| பூசணி | 20 | 40 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 25 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 |
| பாகற்காய் | 50 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 50 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 |
| பயிற்றங்காய் | 50 | 70 |
| லீக்ஸ் | 100 | 120 |
| போஞ்சி | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 5 | 10 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 35 |

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி கலைவாணி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர். ப. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் நா. சத்தியநாதன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. சண்முகலிங்கம் கௌரவ விருந்தினராக சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தலைவர் லயன் வீ. மகாலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-2)

•••

இருபாலை சீ.சீ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல்1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி க. சுந்தரலிங்கம் தல்லமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ப.தியாகராஜா ,சிறப்பு விருந்தினர்களாக சமாதான நீதவான் ரி. தங்கவடிவேல், கிராம அலுவலர் எஸ். தயாபரன் இ.நிமலன் (A.M.T நிறுவனம் இருபாலை) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(ஓ)

## இலங்கை வங்கியின் கருத்தரங்கு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட வங்கி முகாமையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில், ''வடபிராந்திய அபிவிருத்தியில் இலங்கை வங்கியின் பங்கு'' எனும் கருப்பொருளிலான கருத்தரங்கு இன்று புதன் கிழமை பி.ப 2மணி முதல் 5 மணி வரை நல்லூர், பரு.வீதியில் இருந்து செல்லும் விவசாய சேவைகள் வீதியில் 17ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இலங்கை வங்கியின் உற்பத்தி அபிவிருத்திப் பிரிவின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் கி.சமரசிங்க, மனிதவள ஆற்றல் பகுதிப்பிரதி பொது முகாமையாளர் டபிள்யூ.டி.எப்.விமலரட்ண, பிதம சட்ட பிரிவு பொது முகாமையாளர் எம்.கிரிதரன், சர்வதேச நிதிப்பிரிவு பிரதிப் பொது முகாமையாளர் எம்.ஏ.பி.வீரசேகர ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். அத்துடன்கருத்துரையில் கலந்து கொண்டவர்களுடனான கலந்துரையாடலும் இடம் பெற உள்ளதாகவும் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் அறிவித்துள்ளார். (ஓ)

## சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேசத்தில் சட்ட விரோத மது உற்பத்தியில் ஈடுபட்ட 7 பேரை யாழ். சிறு குற்றப் பிரிவினரும் யாழ்.மது வரித்திணைக் களத்தினரும் கைது செய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோத குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தும் நோக்காக மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவ்7 பேரும் சட்டவிரோத மதுபானத்துடனும் அதனை உற்பத்தி செய்யும் பொருட்களுடனும் கைது செய்யப்பட்டு யாழ். நீதி மன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ் வழக்கினை விசாரணை செய்த நீதிவான் ஆர்.வசந்தசேனன் சட்ட விரோத குற்றச் செயலில் ஈடுபட்டமைக்காக 1இலட்சத்து 58ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் சுன்னாகப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் அ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் அனுமதிப்பத்திரமின்றிஅரச சாராயம் விற்பனை செய்தமைக்காக ரூபா 55ஆயிரம் தண்டப் பணமும் மற்றவர் சட்ட விரோத மது உற்பத்தியில் ஈடுபட்டமைக்காக ரூபா 1 இலட்சம் தண்டப்பணமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ஓ-7)

## பருத்தித்துறையில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோரின் மறியல் போராட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் சமுர்த்தி நிவாரணம் பெறும் மக்களின் அவல நிலை குறித்து சமுர்த்தி மகா சங்க நிறைவேற்றுக் குழுவினால் கையளிக்கப்பட்ட மகஜர்களுக்கு எந்தவொரு தீர்வும் கிடைக்கப்பெறாததனால் சமுர்த்தி நிவாரணம் பெறும் மக்கள் ஒன்று கூடி நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் முன்பாக ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களை அலுவலகத்துட் செல்ல விடாது தடுத்து நிறுத்தி அமைதிப் போராட்டமொன்றை நடத்தினர்.

இதன் போது தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை தாங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.பெருந்திரளான மக்கள் பிரதேச செயலக வாசலில் கூடியிருந்தமையால் அலுவலர்கள் உள் நுழைய முடியாதிருந்தது. பொலிஸாரும்இராணுவத்தினரும் அங்கு பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதனை முன்னிட்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சமுர்த்தி மகாசங்க நிறைவேற்றுக் குழு தலைவர் திருமதி செ.கலாநிதி தலைமையில் 6பேர் அழைக்கப்பட்டனர். இவர்களுடனான சந்திப்பு பரு. பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலருடன் நடைபெற்றது.

இதில் அவர்களது.முதலாவது கோரிக்கையான யாழ். அரச அதிபரைச் சந்தித்து பேசுவதற்கான வசதி செய்தல் தொடர்பாக பிரதேச செயலர் உடன் தொலைபேசியில் யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டு பேசியதில் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் சந்திக்க அழைக்கப்பட்டனர்.

அவர்களது ஏனைய நான்கு கோரிக்கைகளும் கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச செயலர் உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அமைதியான கலைந்து சென்றனர். (ஓ-52)

## யாழ்.நகரில் இயங்கி வந்த மினி திரையரங்கு உரிமையாளர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் ஆபாச திரைப்படங்களைக் காண்பித்து வந்த மினி திரையரங்கு உரிமையாளர் ஒருவர் கைது செய்யப் பட்டதுடன் 14ஆபாச இறுவட்டுக்கள், உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்.கஸ்தூரியார் வீதியில் ஆபாச படங்களைத் திரையிட்டு வந்த மினித் திரையரங்குக்குள் திடீரென உள் நுழைந்த சுன்னாகப் பொலிஸார் உரிமையாளரை கைது செய்ததுடன் ஆபாசப்படங்களைப் பார்த்தவர்களை கடுமையாக எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

கடந்த வாரம் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சரின் உத்தரவின் பேரில் சுன்னாகம் பிரதம பொலிஸ்பரிசோதகர் தலைமையிலான பொலிஸாரே திடீர்சோதனையை மேற் கொண்டு வருகின்றனர். திரையரங்கு உரிமையாளரை கைது செய்து யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

உரிமையாளரை விசாரணை செய்த யாழ். மேலதிக நீதவான் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஓ-5)

## நியமனம் வழங்கப்படாத பட்டதாரிகளின் கவனயீர்ப்பு நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இருந்து கடந்த 2007 ஆம் ஆண்டுநடாத்தப்பட்ட வடமாகாண ஆசிரியர்போட்டிப்பரீட்சைக்குத்தோற்றிதகைமை பெற்ற 826 பட்டதாரிகளில் இன்னும் 234 பேருக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

இது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் நேற்றுக் காலை 8.30 மணி முதல் யாழ். கல்வி வலயப் பணிமனைக்கு முன் தமது கோரிக்கைகள் தாங்கிய பதாதைகளுடன் அமைதியாக கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். (ஓ)

## பெண் சாரணியர்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இலங்கைச் சாரணியர் மன்றம் நடத்திய பெண் சாரணியர்களுக்கான வாழ்த்து மடல் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு **வலிகாமம்** க. கஜானி- (பொன்னாலை வ.பெ. வித்தி), கு.துவாரகா- (பண்டத்தரிப்பு பெண் கள் உ.த. பாடசாலை), கு. விதுஷனா- (அராலி சரஸ்வதி மகா வித்தி), **யாழ். வலயம்** - நே. தரணியா -(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ம.கனுலா- (திருக்குடும்ப கன்னியர் மடம்), ம.மான்நேச்சில்- (திருக் குடும்ப கன்னியர் மடம்)

**சாரணியர் - வலிகாமம் வலயம்** ப.ஜானகி- (இணுவில் மத்திய கல்லூரி), யே. பொஸ்ரினா- (பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை), ந. சத்தியவதனி- (இணுவில் மத்திய கல்லூரி).

**யாழ் . வலயம்** அ. அனறொய்சி- (புனித திரேசாள் மகளிர் கல்லூரி), ஜெ. கஸ் தூரி - (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அ. அனற் லொறேனா -(புனித ரேசாள் மகளிர் கல் லூரி).

**சிரேஷ்ட சாரணி - வலிகாமம்** ச.கஜனி (பண்டத்தரிப்பு பெண்கள் உ.த. பாடசாலை).

**யாழ். வலயம்** கு.மேரி ஜசிந்தா (திருக் குடு ம்ப கன்னியர் மடம்). (ஓ)

## தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம், இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி சுன்னாகம் தெற்கு ஒற்றுமை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் இன்று பி.ப 4 மணிக்கு காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் புவனேஸ்வரி அம்பாள் 'பி' விளையாட்டுக் கழகமும், நாளை பி.ப 4 மணிக்கு மறு மலர்ச்சி விளையாட்டுக் கழகம் எதிர் கண்ணகி 'பி' விளையாட்டுக்கழகமும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிக்கு சிந்து விளையாட்டுக் கழகம் எதிர் பாரதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஓ-2)

## தையல், தட்டெழுத்து வகுப்புகள் ஆரம்பம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தில் இலவச தையல், தட்டெழுத்து வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. பயிற்சி பெற விரும்பும் இருபாலரும் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கு மாறு சனசமூகநிலை பொறுப்பாளர் ச. நிமலன் கேட்டுள்ளார். (ஓ-36)

## மனை முகாமைத்துவ கற்கை நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் .இந்து மகளிர் கல்லூரியில்முறை சாராக் கல்விப் பிரிவின் கீழ் மனை முகாமைத்துவ கற்கை நெறி ஆரம்பிக்கப்பட உள்ளது. அதனைக் கற்க விரும்புபவர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை மார்ச் மாதம் முதலாம் திகதியன்று கல்லூரியில் பெற்று பூர்த்தி செய்து அன்றே அலுவலகத்தில் கையளிக்கும் படி கல்லூரி அதிபர் திருமதி வி. பேரின்பநாதன் கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## திருச்சிலுவைப் பாதை

(ஊர்காவற்றுறை)

இயேசுவின் திருப்பாடுகளை நினைவு கூரும் திருச்சிலுவைப் பாதை நிகழ்வு நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஊர்காவற்றுறை மேற்கு வீதி புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-72)




## ஞாயிறு திருப்பலி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி காலை 6.30 மணிக்கு ஞாயிறு திருப்பலி நடைபெறவுள்ளது.

தவக்கால ஆரம்ப முதலாவது வழிபாடாக இருப்பதால் கத்தோலிக்க திருச்சபை பங்கு மக்கள் அனைவரும் தவறாது பங்கு பற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-72)

## சிறுவர்கழகத்தின் பொதுக்கூட்டம்

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி நிலைய சிறுவர் கழகத்தின் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பி.ப 5.30 க்கு நடைபெறும்.

சிறுவர்களுக்கான அங்கத்துவ அட்டை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதால் அனைத்து சிறுவர்களையும் வருகை தருமாறு வாகீஸ்வரி நிலைய செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-36)

# இலங்கையில் தமிழர் 80

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300–900

பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மன் (603 -688) ஆட்சியின் போது அநுராதபுரத்துச் சிங்கள அரச வம்சத்தைச் சேர்ந்த இளவரசன் ஒருவன், மானவர்மன் என்பான், பல்லவர் தலைநகராகிய காஞ்சிக்குச் சென்று பல்லவ மன்னன் ஆதரவைப் பெற்றுச் சில காலம் அங்கு தங்கியிருந்தான். அவ்வாறு தங்கியிருந்த காலத்தில் நரசிம்மவர்மனுக்குப் போர்களில் உதவியும் புரிந்தான்.

இவ்வாறாக சிங்கள இளவரசன் ஒருவன் பல்லவப் பேரரசன் சபையில் செல்வாக்குப் பெற்றுக் காஞ்சியில் பல ஆண்டுகள் தங்கியிருப்பதை நோக்குமிடத்து, பல்லவ அரசுடன், அநுராதபுர மன்னர் ஏலவே அரசியல் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்று கொள்ள இடமுண்டு.

அநுராதபுரத்தில் ஏழாம் நூற்றாண்டின் பிற்பாதியில் பொத்தகுட்ட செல்வாக்குப் பெற்றிருந்த போது, பல்லவ நரசிம்மவர்மன் உதவியுடன் மானவர்மன் படையெடுப்பு நடத்தி அநுராதபுரத்தைத் தாக்கினான். ஆனால் அங்கு வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்று முன், திடீரெனத் தன் படைகளுடன் காஞ்சிக்கு மானவர்மன் திரும்ப நேரிட்டது. இதற்குக் காரணம் நரசிம்மவர்மன் நோயுற்றிருந்தமை எனக் கூறப்பட்டுள்ளது. மானவர்மன் திரும்பிச் சென்றபின் நரசிம்மவர்மன் இறந்ததினாலோ என்னவோ மேலும் பல ஆண்டுகள் காஞ்சியில் அவன் தங்கியிருந்து, மீண்டும் ஒரு படையெடுப்பை இரண்டாவது நரசிம்மவர்மன் காலத்தில் (680-720) நடத்தினான்.

இப்படையெடுப்பின் போது பொத்தகுட்டனுடன் அவன் நியமித்திருந்த மன்னனும் கொல்லப்பட்டான். மானவர்மன் வெற்றிகரமாக அநுராதபுரத்தின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான்.

### பாண்டியர் எழுச்சி

மானவர்மன் ஆட்சிக் காலத்தின் பின் தமிழ்நாட்டில் அரசியல் நிலை மாறத் தொடங்கியது. மதுரையை மையமாகக் கொண்டு பாண்டிய வம்சத்தினர் படிப்படியாக எழுச்சி பெறத் தொடங்கினர். அவர்கள் ஆதிக்கம் வளர, தவிர்க்க முடியாத வகையில் பல்லவருடன் மோத வேண்டிய நிலை உருவாகியது.

ஆறாம் நூற்றாண்டில் கடுங்கோன் என்ற பாண்டியன் களப்பிர மன்னன் ஒருவனை வெற்றி கொண்டு பாண்டி நாட்டில் ஆட்சியைத் தொடங்கியதிலிருந்து பாண்டியர் எழுச்சி நடைபெற்றது. இம்மன்னனுக்குப்பின் படிப்படியாக ஏற்பட்ட எழுச்சியைக் காட்டுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

எனினும், ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் அரிகேசரி மற்றும் ராஜசிம்மன் போன்ற மன்னர்கள் பல குறுநில அரசர்களை வென்று பாண்டிய அரசை வலுப்படுத்தினர் என அறிய முடிகின்றது.

ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டியப் பேரரசு உச்ச நிலையை அடைந்தது எனலாம். இந்த நூற்றாண்டில் பாண்டிய மன்னனாகப் பதவி பெற்ற ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் (815-862) பாண்டியர் ஆதிக்கத்தைப் பெருக்கிப் பல்லவப் பேரரசுடன் மோதினான்.

இந்நிகழ்ச்சியின் போது இலங்கையும் தென்னிந்திய அரசியலில் சிக்கிக் கொள்வதைக் காணலாம். முதல் தடவையாகப் பாண்டிய மன்னன் ஒருவன் இலங்கைக்குப் படையெடுத்துச் செல்வதை இக் காலத்தில் காணலாம்.

அநுராதபுரத்தில் முதலாம் ஸேன மன்னன் (833-853) ஆட்சி நடத்திய போது, ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் வடக்கு இலங்கையில் படையுடன் வந்திறங்கி அநுராதபுரத்தை நோக்கிச் செல்ல , ஸேன மன்னன் அந்நகரத்தை விட்டு மலை நாட்டுக்குச் சென்றான். பாண்டிய மன்னன் அநுராதபுரத்தில் கிடைத்த செல்வத்துடன் தன் நாடு திரும்பினான்.

இவ்வாறு பாண்டியப் பேரரசு எழுச்சி பெற்று அநுராதபுரத்து அரசையும் அடக்க முற்பட்டதன் விளைவாக இலங்கை தென்னிந்திய அரசியலில் மேலும் சிக்கிக் கொண்டது. வலிமை வாய்ந்த ஓர் அரசு எழுச்சி பெறும்போது அந்த எழுச்சியால் பாதிக்கப்படுவோர் ஒன்று கூடுவது இயல்பே.


அதற்கமைய, இலங்கை பல்லவ அரசுடன் இணைந்து பாண்டியப் பேரரசை எதிர்த் தது. இந் நிலையில் பாண்டியப் பேரரசன் மகனாகிய வரகுண பாண்டியன் தந்தையுடன் தகராறில் ஈடுபட்டு, இலங்கைக்குத் தப்பியோடிச் சென்றான்.

பாண்டியர் குடும்பத்தில் ஏற்பட்ட பிளவினைப் பயன்படுத்திச் சிங்கள மன்னனும் பல்லவ மன்னனும் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனுக்கு எதிராகப் போர் தொடுத்தனர். பல்லவ நிருபதுங்கவர்மன் பாண்டி நாட்டை வடக்கிலிருந்து

பேராசிரியர்
கா. இந்திரபாலா

தாக்க, அநுராதபுரத்து மன்னன் இரண்டாம் ஸேன (853-857) அனுப்பிய படைகள் பாண்டி நாட்டின் தென் பகுதியைத் தாக்கி மதுரையை நோக்கி முன்னேறின. வடக்கில் பாண்டியப் படைகளும் பல்லவர் படைகளும் அரிசில் என்ற இடத்தில் மோதின. அரிசில் போரில் பல்லவர் பாண்டியரை வெற்றி கொண்டனர். அதேவேளை, தெற்கில் சிங்கள மன்னன் அனுப்பிய படைகள் மதுரையைத் தாக்கி வெற்றி பெற்றன. (தொடரும்)





வட்டு இந்து நவோதயக் கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர் பொ. காங்கேயநாதன் மங்களவிளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் (1902-1915)

# கல்லடி வேலனும் 19

வேறுமொரு முக்கியமான விடயம் , யாழ்ப்பாண சமூகத்தில் பயிலப்பட்டு வருவதும், இவருடைய பத்திரிகைகளில் கையாளப்பட்டிருப்பதுமாக அமைவது, பெண்கள் தமது மக்கள் ,கணவன் ஆகியோர் செய்யும் குற்றங்களுக்கு, அல்லது தம்முடன் சம்பந்தமில்லாத இடங்களிலெல்லாம் பழிப்பிற்கும், தூஷனைக்கும் உட்படுத்தப்படுவதாகும்.

உதாரணமாக ஒருவன் செய்யும் பாவகாரியத்தைத் தூஷிக்கும் போது ‘ இவள் மகன்’ என தாய் தூஷனைக்கு உட்படுத்தப்படுவதாகும். இங்கு தாயைப் பழிப்பது ஒரு மகனை வளர்ப்பதில் தாயின் பங்கே உண்மையானது என்பது பெறப்படுமெனக் கூறினும், தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவு நெருக்கத்தைப் பயன்படுத்தி சமூக அங்கத்தவர் ஒருவரைக் கட்டுப்படுத்தல் சாத்தியமாக இருந்திருக்கும் என வாதிட முடியமெனக் கூறினும், பெண்கள் என்ற வகையில் சம்பந்தப்படாத விடயத்தில் பழிப்பிற்கு ஆட்படுத்தப்படல் நியாயமற்ற செய்கையாகவே உள்ளது.

இத்தகைய அஸ்திரப்பிரயோகம் யாரும் பயன்படுத்தக் கூடியது என்பதும் கவனிக்கப்படுவதில்லை. ஏனெனில் எல்லோருக்கும் தாய்மார் உளரல்லவா? இத்தகைய அஸ்திரத்தை க. வே. பல இடங்களில் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம்.

இதற்கு இவ் ஆசிரியர் ஆதாரம் காட்டப் போவதில்லை. விரும்பியோர் அவரது பத்திரிகைகளைப் பார்க்கலாம்.

### யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த கலை பொழுது போக்கு நடவடிக்கைகள் பற்றிய க.வே.யின் கண்ணோட்டமும் தகவல்களும்.

யாழ்ப்பாணத்தின் கலைப் பாரம்பரியம் பொழுது போக்குகள் பற்றிய செய்திகள் மிகவும் முக்கியமானவையாகவும் வியப்பிற் குரியவையாகவும் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கலைப் படைப்புக்களுள் சிலவற்றைப் பற்றியும் , கலைஞர் ஒருவரைப் பற்றியும் கிடைத்துள்ள விடயம் ஆர்வமூட்டுவதாயுள்ளது. அச்செய்திகள் சிறு துணுக்குகளாக இருப்பதால் அவற்றை முழுமையாகப் பதிவது சிறந்ததாக அமையும்.

கோண்டாவில் மகா எம். துரைசாமி யாழ்ப்பாணத்தில் கைச்சித்திர வேலையில் அதிக நிபுணரென்று உயர்தரப் பிரபுக்கள், துரை மக்களால் மிக விதந்து பாராட்டப்பட்ட மேற்படி துரைச் சாமியென்பவர் தமது கைச்சித்திரத்தின் சாமர்த்தியத்தைக் காட்டுமாறு மிகப் பிரமிக்கத்தக்க பொம்மைகளைச் செய்து நடன சபா கொண்டாட நியமித் திருக்கிறார்.

இவர் வேலையைக் கண்ணுற்றார் பிரமியாது போகார். இவர் முயற்சிக்காக பிரபுக்கள், விவேகிகள் உதவி செய்து இவரைத் தளர்ச்சியடையாது உற்சாகப் படுத்துவார்களென்று நம்புகிறோம்.(சு.நா.23.01.1905) பிரதிமைச் சுப்பிறீங்கோடு– கோண்டாவில் ஸ்ரீ. மு. துரைச்சாமிப்பிள்ளையென்னும் சித்திர வேலைக்காரரால் வரும் ஆவணி மீ தமிழுக்கு 7உ துவங்கி எட்டு நாள் வரையுமம் நடத்தப்படும். இதில் நீதவான், நியாய துரந்தரர், வழக்காளிகள், எதிரிகள், சாட்சிக்காரர்கள், தலைமைக்காரர் ஆதிய ஏனையோரும், பதுமைகளாலேயே நடத்துவிக்கப்படும்.

இது நம் யாழ்ப்பாணத்தில் எப்போதாவது கண்டிராநூதனமும் வேடிக்கையுமாயிருக்குமென்பது எம் சித்தாந்தம். நம் நண்பராகிய பிள்ளையின் அபிப்பிராயம் தாம் நடத்தவிருக்கும் இந்நூதனக்காட்சியை வந்து பார்த்து அதன் அருமைக்குப் பெறுபேறாய் ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்து, தம்மையும் தம்முயற் சியையும் ஊக்கப்படுத்திவிடுங்கள் என்பதே (சு.நா. 30.07.1906)

இச்சித்திரக்கலைஞர் ஆக்கிய மேலும் சில படைப்புக்கள் பற்றிய செய்தியில், ‘யாழ்ப்பாணத்தில் இருந்த செட்டிக்கடை வீதியில், காங்கேசன்துறைத் துறைமுகம், பருத்தித்துறைத் துறைமுகம், ஊர்காவற்றுறைத் துறைமுகம், அலுப்பாந்தி , மண்டைதீவு ஆகியவற்றைச் சித்திரமாகத் தீட்டியிருந்தார்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை யாழ்ப்பாண ஏசன்ரர் பார்த்துப் பாராட்டினார் எனவும், செட்டிமார்கள் இவற்றுக்குப் பரிசாக தங்கத்தினால் செய்யப்பட்ட பல மோதிரங்களை வழங்கியிருந்தனர் எனவும் கூறியுள்ளார். இவை வெகு வினோதமான சித்திரங்களாக இருந்தன என்பது அவரின் அபிப்பிராயமாகவும் அமைந்திருந்தது.

சிறந்த கலைப்படைப்புக்களில் ஆர்வம் கொண்ட க.வே. அக்காலத்தில் கொழும்பில் யாழ்ப்பாணத்தவரால் நடத்தப்பட்ட நாடக நிகழ்வுகள் பற்றி மிகவும் கடுமையாகவும், ஏளனமாகவும், வாசகர்களை எச்சரிக்கும் வகையிலும் குறிப்பிட்டுள்ளார்.

நாடக கொம்பனி: “கொழும்பிலே மெஸ். இராசநாயகம்பிள்ளை அவர்களால் நடப்பிக்கப்படும் டிறாமா பிறைஸ் பார்க்கிலும் மெஸ். செல்லையாபிள்ளை டிறாமா பூந்தோட்டத்திலும், மிக முழக்கமாய் நடைபெற்று வருகிறது.

இவ்விரு பாலாரும் இந்தியாவில் இழிபட்டுச் சுழிகெட்டு அழிபட்டுக் கழிபட்ட கூத்தாடிப் பெண்களை அழைத்து அவர்களுக்கு “விளக்குமாற்றுக்கு வெள்ளிக் குஞ்சம் கட்டினாற் போல” த்தகாத வர்ணப் பெயர்களைச் சூட்டி றவாமணி, சிந்தாமணி, பாலாமணி, தேனாமணி, இரா

திருமதி.சோ.கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சாமணி, .... புஷ்பகாந்தி, அம்பாள், துரைக்கண்ணு, கமலாம்பாள், ரெத்தினாம்பாள், தொட்டார்பாள் என்னும் நாமங்களைச் சொல்லி மகிழ்ந்து கொண்டாடி மாசாந்தம் ஒவ்வொருவருக்கு இருநூறு , முன்னூறு ரூபா சம்பளம் கொடுத்து வருகின்றனர்..... முன்னொரு முறை கொழும்பிலுள்ள நமது நேசரில் அநேகரை குருடு செவிடாக்கி அனேகரை எமலோகத்துக்கனுப்பி ..... அன்பீர்! சண்முக சுந்தரம் செய்த சாமர்த்தியத்தை யோசித்துப் பாருங்கள் .... (சு.நா. 9.1.1903) (தொடரும்)

# கலைத்துறையில் தமிழனாலும் சாதிக்க முடியும் சர்வதேசத்திற்கு நிரூபித்தவர் ஏ.ஆர்.ரஹ்மான்

இரு ஒஸ்கார் விருதுகளைப் பெற்றுள்ள ஏ.ஆர்.ரஹ்மான் தமிழர்களான நம் அனைவருக்கும் மிகப்பெரிய கௌரவத்தை தேடித்தந்திருக்கிறார்.இதற்கு முன் எந்தவொரு இந்திய இசையமைப்பாளரும் சாதிக்காததை சாதித்து மிக உயர்ந்த இடத்தை ரஹ்மான் எட்டிவிட்டார்.

அமெரிக்க மண்ணில் தமிழனின் பெருமையை உயர்த்தி கலைத்துறையில் தமிழர்களாலும் சர்வதேச தரத்திற்கு இணையான திறமையை வெளிப்படுத்த முடியும் என நிருபித்துவிட்டார்.

இடைவிடாத முயற்சி, இரவு பகல் பாராத கடின உழைப்பின் மூலம் இச் சாதனையை புரிந்திருக்கிறார்.

## இசைக்கருவிகளை வாடகைக்கு விடும் நிலை

1966ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி பிறந்த ஏ.ஆர்.ரஹ்மானின் இயற்பெயர் ஏ.எஸ்.திலீப் குமார். இவருடைய தந்தை சேகர் மலையாளப் பட உலகின் முன்னணி இசையமைப்பாளராக திகழ்ந்தவர். இவருடைய தாய் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்.

9 வயதாக இருந்த போது தந்தை சேகர் மரணமடைந்தார்.

இதனால் குடும்பம் நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டது. வீட்டில் இருந்த இசைப்பொருட்கள் எல்லாம் விற்று வாடகை வீட்டில் வாழ்க்கை நடத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் தாயாரின் அன்பு அரவணைப்பில் வளர்ந்த ஏ.எஸ்.திலீப்குமார் இஸ்லாம் மதத்திற்கு மாறினார். தனது பெயரை ஏ.ஆர்.ரஹ்மான் என்று மாற்றிக்கொண்டார்.

தனது இளவயது நண்பர்களான டிரம்ஸ் சிவமணி , ஜோன் அன்ரனி, ஜோ ஜோ , ராஜா ஆகியோருடன் இணைந்து கீபோர்ட் பிளேயராக தனது இசைப்பயணத்தைத் தொடங்கினார்.

ஆரம்பத்தில் மாஸ்ரர் தனராஜிடம் இசை பயின்ற ஏ.ஆர்.ரஹ்மான் தனது 11 ஆவது வயதில் இசை ஞானி இளையராஜாவிடம் கீபோர்ட் கலைஞராகச் சேர்ந்தார். பின்னர் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் , ரமேஸ்நாயுடு , ஜாகீர் உசேன், குன்னக்குடி வைத்தியநாதன் எல்.சங்கர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றினார். குறிப்பாக எல். சங்கருடன் இணைந்து அவர் நடத்திய பல உலகளாவிய கச்சேரியில் இணைந்து பணியாற்றினார்.

1992ஆம் ஆண்டு ரஹ்மானின் இசைப் பயணத்தில் முக்கிய மைல்கல். தனியாக சொந்தமாக இசைப்பதிவு மற்றும் இசைக்கலப்பு ஸ்ரூடியோவை தொடங்கினார் ரஹ்மான் . தனது வீட்டுக்குப் பின்னால் இந்த ஸ்ரூடியோவை தொடங்கினார். பஞ்சதன் ரெக்கார்ட் இன் என்று அதற்குப் பெயர். இன்று இந்தியாவில் அதி நவீன ரெக்காடிங் ஸ்ரூடியோக்களின் ஒன்றாக பஞ்சதன் விளங்குகிறது.

## சின்னச் சின்ன ஆசை

1992ஆம் ஆண்டு இயக்குநர் மணிரத்னம் தனது "ரோஜா "படத்தில் இசையமைக்க ரஹ்மானுக்கு வாய்ப்பளித்தார்.இப்படத்தின் சின்ன சின்ன ஆசை ... உள்ளிட்ட பாடல்கள் தமிழ் இசை உலகில் புரட்சி ஏற்படுத்தின. பல ஆண்டுகள் ரசிகர்களின் மனதில் இருந்து இப்பாடல் மறையவில்லை. ரஹ்மான் முதல் படத்திலேயே தேசிய விருதை கைப்பற்றினார். "டைம்" பத்திரிகை உலகின் சிறந்த 10 பாடல் தொகுப்புகளில் ஒன்றாக "ரோஜா"த் திரைப்படத்தின் பாடல்களை குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் வேறு எந்த இசையமைப்பாளருக்கும் கிடைக்காத பெருமைகள் இவை. தமிழ் சினிமாவில் முன்னணி இசையமைப்பாளராக ரஹ்மான் உயர்ந்தார்.

இவரால் மேற்கத்திய இசையில் மட்டுமே சாதிக்க முடியும் என பரவலாக விமர்சனம் எழுந்தது. "கிழக்கு சீமையிலே, கருத்தம்மா" ஆகிய படங்கள் மூலமாக இந்த விமர்சனங் களையும் பொய்யாக்கினார். "ரோஜா" "பம்பாய்" "ஜென்டில்மேன்",காதலன் ஆகிய படங்கள் மூலமாக பாலிவூட்டில் நுழையும் முன்பே ரஹ்மான் இந்தி திரையுலகிலும் பிரபலமடைந்தார்.

பிரபல பாலிவூட் இயக்குநர் ராம் கோபால் வர்மாவின் "ரங்கீலா" படத்தின்



மூலமாக இந்தி சினிமாவில் ரஹ்மான் கால்பதித்தார். இந்தப் படத்தின் பிரமாண்ட வெற்றியை தொடர்ந்து அடுத்தடுத்து பாலிவூட் படங்களில் பணியாற்ற தொடங்கினார். தில்சே, லகான் , தால் என ரஹ்மானின் வெற்றிப் பயணம் தொடர்ந்தது. பாலிவூட்டில் தயாரிக்கப்படும் முக்கியமான படங்களுக்கு ரஹ்மான் இசையமைக்க தொடங்கினார்.

இந்திய சுதந்திர பொன்விழாவின் போது ரஹ்மானின் வந்தே மாதரம் வெளியானது. ஜேர்மனியில் மைக்கேல் ஜாக்சனின் இசை நிகழ்ச்சி, பிரிட்டனில் "பாம்பே டிரீம்ஸ்" இசை நாடகம் என சர்வதேச வாய்ப்புகள் ரஹ்மானுக்கு கிடைத்தன."எலிசபத் த கோல்டன் ஏஜ்" , "லார்ட் ஒப் த ரிங்ஸ்", "வாரியர்ஸ் ஆப் ஹெவன் அன்ட் எர்த்", இன்சைட் மான் , "ஆக்சிடென்டல் ஹஸ்பண்ட் " போன்ற பாலிவூட் படங்களில் இவரதுஇசை பயன்படுத்தப்பட்டது.

வந்தே மாதரத்தின் வெற்றியை தொடர் ந்து "ஜன கண மன" வெளிவந்து பாராட்டைப் பெற்றது. இது இந்திய தேச உணர்வை இளைஞர்களிடையே தட்டி எழுப்பியது. ஐ. நா.வின் வறுமை ஒழிப்பு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வெளியான "பிரே பார் மி பிரதர் " என்ற இவரது அல்பமும் புகழ் பெற்றது. 2005 ஆம் ஆண்டு ஏ.எம் ஸ்ரூடியோ தொடங்கி அதை பஞ்சதன் ஸ்ரூடியோவுடன் இணைத்தார்.

கே.எம். மியூசிக் என்ற பாடல் பிரிவுகள் வெளியிடும் நிறுவனத்தை தொடங்கினார் முதன் முதலில் தனது "சில்லுனு ஒரு காதல்" பாடலை இந்த நிறுவனம் மூலமாக வெளியிட்டார் இந் நிலையில் கடந்த ஆண்டு வெளியான "ஸ்லம்டாக் மில்லியனர்" படம் இவரது இசைப் பயணத்தில் மிகப் பெரிய திருப்பு முனையாக அமைந்தது. உலகம் முழுவதும் திரைப்பட விழாக்களில் இந்தப் படம் விருதுகளை வாரிக்குவித்தது. இந்த படத்தின் இசைக்காக ரஹ்மானுக்கு கோல் டன் குளோப் ,பாப்டா, பிளாக் ரீல் எவோர்ட் புராட்காஸ்ட் பிலிம் கிரிட்டிக்ஸ் எவோர்ட், சேட்டிலைட் எவோட்ஸ் உள்ளிட்ட பல விருதுகள் கிடைத்தன.

இந்தியாவிலேயே நான்கு முறை தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் ரஹ்மான் மட்டுமே. கோல்டன் குளோப், பாப்டா விருதுகளை பெறும் முதல் இந்தியரும் அவரே. உலகிலேயே மிக வேகமாக விற்பனையாகும் இசைத் தொகுப்புகளில் ரஹ்மானின் இசைத் தொகுப்புகள் ஆறாவது இடத்தில் உள்ளன.

இதன் மூலம் மடோனா, எல்டன் ஜான் போன்ற ஜாம்பவான்களையே ரஹ்மான் முந்தியுள்ளார்.42 வயதாகும் ரஹ்மானுக்கு மனைவி சாய்ரா பானுவும் குழந்தைகள் கதீஜா , ரகீமா , அமான் ஆகியோர் உள்ளனர்.

இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் இவரது மூத்த சகோதரியின் மகன். இசை வரலாற்றில் தனக்கென ஒரு புதிய அத்தியாயத்தை பெற்று விட்ட ரஹ்மான் இசையாலும் மகிழ்ச்சியாலும் மனம் நிறைந்திருக்கிறார்.

## ரூ.50 சம்பளத்திலிருந்து ஒஸ்கார் விருது வரை

இசையமைப்பாளர் ரஹ்மான் இசைக்காகவே ஓடிய படங்கள் ஏராளம். 1990 களில் இந்திய இசைத்துறையில் தனக்கென தனிப்பாணியை வகுத்த இவர் மாநில மற்றும் தேசிய விருதுகளைப் பெற்றார். இவரது முதல் படமான "ரோஜா" தேசிய விருது பெற்றது. இவரது முதல் ஆங்கில படமான ஸ்லம் டாக் மில்லியனர் ஒஸ்கார் விருதுகளை குவித்துவிட்டது.

அமெரிக்காவில் ரஹ்மான் அளித்த பேட்டி,

'ஸ்லம்டாக் மில்லியனர்' இயக்குனர் இந்தியாவை இதற்கு முன் பார்த்ததில்லை. மும்பை சேரிப்பகுதி குறித்த அவரது படத்தில் பங்கேற்க நீங்கள் தயங்கினீர்களா?

முதலில் டேனி பாய்ல் திரைக்கதையை அனுப்பி வைத்தார். ஆனால் அதை படிக்க எனக்கு நேரமில்லை. இயக்குநர் சேகர் கபூர் , டேனி அவரது நண்பர் என்றும் அவரை காத்திருக்க வைக்க வேண்டாம் என்றார். அதன் பின் சில மாதங்களில் இயக்குனர் அனுப்பிய 'டிவிடி' யை பார்த்தேன். படம் பிடித்திருந்ததால் ஒப்புக்கொண்டேன். மூன்று வாரங்களில் இசையமைத்தேன்.

உங்கள் வாழ்க்கையையும் படம் பிரதிபலித்ததா?

ஆம், ஆனால் அந்த அளவுக்கு நான் போராடவில்லை. நானும் நடுத்தர குடும்பத்தில் தான் பிறந்தேன். அப்போது பல விடயங்களை எட்டவில்லை. இப்போது ஹாலிவூட்டில் உங்கள் முன் அமர்ந்து பேசுகிறேன் என்பதில் மகிழ்ச்சி.

பாய்ல் உங்களிடம் எவ்வாறான இசையை எதிர்பார்த்தார்?

சென்டிமென்ட், சோகமான இசை வேண்டாம் என கூறினார். சிலகாட்சிகள் படத்தில் சோகமாக இருக்கும். அதை மாற்றும் வகையில் இசை அமைந்திருக்கும்.

படம் பார்க்கும் போது மலை உச்சியில் இருந்து விழுவது போலவும், பின்னர் சிறகை விரித்து பறப்பது போலவும் இருக்கும்.

இந்திய படங்களுக்கும், ஆங்கிலப்படங்களுக்கும் இசையமைப்பதில் என்ன வித்தியாசம்?

"ரோஜா' படம் பல விருதுகளை பெற்ற போது மிகப்பெரிய ஆச்சரியமாக இருந்தது.

தற்போது தான் முழுவதுமாக ஓர் ஆங்கில படத்தில் பங்கேற்றுள்ளேன். இது புதிய அனுபவம்.

முதலில் பெற்ற சம்பளம்?

முதலில் ஸ்ரூடியோவில் ரெக்கார்ட் பிளேயரை இயக்குவதற்காக சம்பளம் பெற்றேன். தினம் ரூ.50 கொடுத்தார்கள் என நினைக்கிறேன். பின்னர் ஒரு போட்டோ லாப் விளம்பரத்துக்கு இசையமைத்தேன். விளம் பரங்களில் பணம் கிடைத்தது. அதன் மூலமாக சினிமாவில் நுழைந்தேன்.

ஒரு ஆண்டில் எத்தனை படத்துக்கு இசையமைப்பீர்கள்?

சில சமயம் எட்டு படங்களை முடிப்பேன். ஒரு சில ஆண்டுகளில்

ஆர்.யூ. பாலமுருகன்

இரண்டு படங்களுக்கு மட்டுமே இசை யமைப்பேன். பாலிவூட்டில் ஒரு சிலர் ஒரே ஆண்டில் 30 படங்களுக்கு இசையமைத்துள்ளதாக கேள்விப் பட்டிருக்கிறேன்.

எந்த ஹாலிவூட் படத்தில் பணியாற்றியது சுவாரஸ்யமாக இருந்தது?

"லார்ட் ஒப் த ரிங்ஸ்" படத்தில் வேலை அதிகமாகவும் இருந்தது. சுவாரஸ்யமாகவும் இருந்தது. எலிசபத் படத்திற்காக இது வரை செய்யாத புதிய பாணியில் இசையமைத்தேன் என்றார்.

# இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி இன்று டெல்லியில் ஆர்ப்பாட்டம்

## சரத்குமார் அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படவும், அப்பாவி தமிழர்கள் இலங்கை இராணுவத்தால் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்தவும் மத்திய அரசு தலையிட்டு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்தி அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் தலைவர் சரத்குமார் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் புதுடெல்லியில் இன்று புதன் கிழமை நடைபெற உள்ளது.

இது குறித்து அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் ஆர். சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில நிர்வாகிகளும், அனைத்து மாவட்ட செயலாளர்களும், ஆயிரக்கணக்கான தொண்டர்களும் பங்கேற்கின்றனர் என்று தெரிவித்தார். (ஓ-5)

# இலங்கையில் தமிழர் தவிக்கும் நிலையில் பிறந்தநாள் கொண்டாட்டம் வேண்டாம்

## மு.க. ஸ்டாலின் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் போரில் சிக்கித் தவிக்கும் நேரத்தில் தனது பிறந்தநாளான மார்ச் முதலாம் திகதி அன்று தான் கொண்டாடப்போவதில்லை எனவும் கழகத்தொண்டர்கள் யாரும் சுவரொட்டிகள், விழாக்கள் போன்றவற்றில் ஈடுபட வேண்டாம் என்றும் தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சரும் தி.மு.க பொருளாளருமான மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில்,

வரும் மார்ச் முதல் நாள் அன்று எனது பிறந்த நாள் என்பதால் கழ கத்தோழர்களும் இளைஞர் அணி நண்பர்களும் அதனைக் கொண்டாடுவதற்கான முன்னேற்பாடுகளை செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இலங்கையிலே நம் தமிழ்க்குடும்பங்கள் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிறார்கள். இராணுவத்தாக்குதலை நிறுத்தி அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் நிம்மதியாக வாழ வழி வகை செய்திட வேண்டும் என்று நம் ஒப்பற்ற தலைவர் கலைஞர் பல்வேறு வகைகளில் முயற்சி மேற்கொண்டு வருவதை நாடே நன்கறியும். இத்தகைய சூழ்நிலையில் எனது பிறந்த நாள் விழாவினை நடத்திட என் மனம் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற முயற்சியினை மேற்கொண்டுள்ள கழகத்தோழர்களுக்கும் இளை ஞர் அணி நண்பர்களுக்கும் நான் அன்புடன் தெரிவித்துக்கொள்வது உங்கள் ஒவ் வொருவரின் அன்பும் வாழ்த்தும் என் நாளும் எனக்குண்டு என்பதை நான் நன்கு அறி வேன்.

ஆதலால் எக்காரணம் கொண்டும் பிறந்த நாள் விழா கொண்டாடுவது, அதற்கான விளம்பரப் பதாகைகள் வைப்பது, சுவரொட்டிகள் ஒட்டுவது போன்ற முயற்சிகளில் கண்டிப்பாக ஈடுபட, வேண்டாம் என உங்களின் ஒருவனாக கேட்டுக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார். (ஓ-5)

# இலங்கைக்கு இந்தியா ஆயுதம் வழங்கவில்லை காங்கிரஸ் கட்சி மீண்டும் விளக்கம்

(சென்னை)

இலங்கைக்கு எவ்வித ஆயுதங்களையும் ரேடர்களையும் வழங்கவில்லை என மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது என்று சட்ட சபையில் காங்கிரஸ் தலைவர் சுதர்சனம் தெரிவித்தார்.

சட்டசபையில் நேற்று முன்தினம் நடந்த விவாதத்தில் காங்கிரஸ் கட்சி கோவை தங்கம் இலங்கைத் தமிழர்களுக்கு உரிமை பெற்றுத்தரவும் அங்கு அமைதி ஏற்படவும் இந்திரா, ராஜிவ் என காங்கிரஸ் தான் உண்மையாக உதவி செய்தது. ராஜிவை இழந்த பின்பும், இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கவும், அங்கு அமைதியை ஏற்படுத்தவும் சோனியா பெரு முயற்சி எடுத்து வருகிறார்.

ஆனால், காங்கிரஸ் கொடி எரிப்பு, சோனியா உருவபொம்மை எரிப்பு போன்ற சம்பவங்கள் மனவேதனை அளிக்கின்றன. தமிழகத்தில் நடக்கும் ஆட்சிக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது என்பதற்காக அமைதியாக உள்ளோம். அமைதியை சீர்குலைக்கும் வகையில் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடந்தால் காங்கிரசார் வீதியில் இறங்கி போராட வேண்டி வரும் எனக் கூறினார்.

பா.ம.க. நெடுஞ்செழியன், இலங்கையில் போர் நிறுத்தம் தயார் என விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு தலைவர் நடேசன் அறிவித்தும் இன்னும் போர் நிறுத்த முடியாது என இலங்கை அரசு கூறி வருகிறது. மற்ற நாடுகளுடன் சேர்ந்து இந்திய அரசு போர் நிறுத்தம் செய்ய குரல் கொடுக்க வேண்டும் என பட்ஜெட்டில் தெரிவிக்காதது வேதனையளிக்கிறது. பிரணாப் முகர்ஜி அடுத்த நாட்டின் இறையாண்மையில் இந்தியா தலையிட முடியாது என்கிறார்.

ஆனால் இலங்கை இராணுவத்துக்கு ரேடர் அனுப்பியது, ஆயுதங்கள் அனுப்பியது, போர்ப் பயிற்சி அளித்தது போன்றவற்றை மட்டும் செய்யலாமா? எனக் கேள்வி எழுப்பினார்.

## பாரதச் செய்திகள்

இதற்கு பதிலளித்து காங்கிரஸ் கட்சி ஞானசேகரன் கருத்து தெரிவிக்கையில்,

தவறான தகவல்களை அடுக்கிக் கொண்டுள்ளார். இலங்கை அரசுக்கு எவ்வித ஆயுதங்களையும் ரேடர்களையும் தரவில்லை என மத்திய அரசு ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளது. நாட்டில் தான் குழப்பத்தை ஏற்படுத்தி வரு கின்றனர் .என்றால் சபைக்குள்ளும் குழப் பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என்று தெரிவித்தார்.

அத்துடன் அக்கட்சியைச் சேர்ந்த சுதர்சனம் தெரிவிக்கையில் ,முதல்வரைச் சந்தித்த பின் பிரணாப் முகர்ஜி கூறும் போது, இலங்கைக்கு எவ்வித ஆயுதங்களையும் வழங்கவில்லை என தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார் எனத் தெரிவித்தார். (ஓ-5)

# பாகிஸ்தானின் கேள்விகளுக்கு விரைவில் விளக்கம் பிராணப் உறுதி

(புதுடில்லி)

மும்பை தாக்குதல் குறித்து பாகிஸ்தான் 30 கேள்விகளை இந்தியாவிடம் எழுப்பியுள்ளது. இந்த கேள்விகளை இந்தியாவுக்கான பாக். உயர் ஸ்தானிகர் ஷாஹித் மாலிக் இந்திய வெளியுறவு துறை செயலர் சிவ்சங்கர் மேனனிடம் ஒப்படைத்தார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரணாப்,

பாகிஸ்தான் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு விரைவில் விளக்கம் அளிக்கப்படும் என்றும் ஆனால் மும்பை தாக்குதல் சம்பவம் குறித்து பாகிஸ்தானுடன் கூட்டு விசாரணை என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்றும் கூறியிருக்கிறார். (ஓ-5)


யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் அறிமுகப்படுத்தும்

இலகு முறையிலான கடன் விற்பனைத் திட்டம்



2009 மார்ச் மாதம் முதல்

இவ் விற்பனைத் திட்டமானது அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகளில் கடமையாற்றுகின்ற உத்தியோகஸ்தர்கள், ஓய்வூதியர்கள் ஆகியோரின் நலன்களை கருத்திலெடுத்து முன் தொடரப்படும் ஒரு விசேட ஏற்பாடாகும்.



யாழ்ப்பாணம் பல நோ.கூ. சங்கத்தின் ஏதேனுமொரு கிளை நிலையமொன்றில் நீங்கள் ஒரு வாடிக்கையாளராக இருப்பின்

உங்கள் பெயர் விபரங்களை எங்களது கிளை நிலையமொன்றில் பதிவு செய்து கொள்ளுங்கள்.



நீங்கள் உங்களுக்கு மாதமொன்றுக்குத் தேவையான பொருட்களை கடனடிப்படையில் வாங்க விரும்பினால்

எந்தவித சிரமங்களும் இல்லாத வகையில் உங்களுடைய தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்வோம்.






மாதாந்தம் உங்களது சம்பளத் திகதி அன்று உங்களது கொடுப்பனவுகளை நீங்கள் செலுத்தி முடிக்கலாம். அவ்வாறு விற்பனைப் பணத்தை செலுத்தும் சமயத்தில் நீங்கள் உங்களது கொடுப்பனவை காசோலை மூலம் தான் செய்யப் போகிறீர்கள் ஆயின் அதனையும் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். எந்தவிதமான கட்டண அறவீடுமின்றி உங்களது காசோலைகளை பணமாக மாற்றி வழங்குகின்ற சேவையினையும் உங்களிற்காக நாங்கள் செய்வோம்.

நீங்கள் எமது சேவையைப் பகிர்ந்து கொள்ள விரும்பினால் உடன் உங்களுக்கு அருகிலுள்ள எங்களது கிளை நிலையம் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள்.

தலைவர் /பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம், யாழ்ப்பாணம்

(சீ/2146)



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா மனிக்பாம், கதிர்காமர் நிவாரண கிராமத்தில் தங்கியுள்ள மக்கள் சிலரையும் அங்குள்ள மாணவிகள் கல்வி கற்பதையும் குடிசைகள் அமைக்கப்படுவதையும் முகாமில் நிறுவப்பட்டுள்ள கடையில் பொருட்களை வாங்க பொதுமக்கள் காத்திருப்பதையும் பெண் ஒருவர் தையலில் ஈடுபட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.

# கஷ்டத்தின் மத்தியில் வாழும் எமக்கு உரிய வசதிகள் வழங்கப்பட வேண்டும்

## மனிக்பாம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் கோரிக்கை

(வவுனியா)

உரிய வசதிகளின்றி பெரும் கஷ்டத்தின் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றோம். சமைத்து உண்பதற்கு மா, அரிசி என்பன வழங்கப்படுகின்ற போதும் ஏனைய பொருட்களை வாங்குவதற்கு எம்மிடம் பணம் இல்லை. குறுகிய பகுதியில் பெருமளவானோர் தங்க வைக்கப்பட்டுள்ளதால் நோய்களும் ஏற்படும் நிலை காணப்படுகின்றது என்று வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா மனிக்பாம், கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் தங்கியுள்ள மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முகாமில் சுகாதார வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றது. குளிப்பதற்கு பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. எனவே உரிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து செய்தியாளர் குழுவொன்றினை நேற்று முன்தினம் தேசிய பாதுகாப்பிற்கான மத்திய நிலையம் வவுனியா மனிக்பாம், கதிர்காமர் நிவாரணக் கிராமத்திற்கு அழைத்துச் சென்றிருந்தது. இந்தச் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

மனிக்பாம், கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இங்கு செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த பொதுமக்கள் சமைத்து உண்பதற்கு அரிசி, பருப்பு, மா போன்ற பொருட்கள் வழங்கப்படுகின்றது.

ஏனைய பொருட்களை வாங்குவதற்கு எம்மிடம் பணம் இல்லை. நாம் தொழிலும் செய்ய முடியாத நிலை உள்ளது. இடம் பெயர்ந்து வந்த எமக்கு உரிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

எமது பிள்ளைகள் கல்வி கற்பதற்கு அப்பியாசக் கொப்பிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. ஒரு கொப்பியிலேயே எட்டுப் பாடங்களையும் எழுத வேண்டிய நிலை காணப்படுகின்றது. பெருமளவானோர் தங்க வைக்கப்பட்டுள்ளமையால் குளிப்பதற்கு கூட பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. நாம் எங்கும் வெளியேற முடியாத நிலை உள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பொதுமக்களின் கருத்துக்கள் குறித்து வவுனியா செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸிடம் வினவப்பட்ட போது இடம் பெயர்ந்த மக்களுக்கு ஆரம்பக் கட்டமாக தற்போது இத்தகைய வசதிகளை வழங்கியுள்ளோம். தற்போதைய நிலையில் அதிகபட்சமாக வழங்கக் கூடியவற்றை நாம் வழங்கி வருகின்றோம் என்று தெரிவித்தார்.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வரும் மேலும் 40 ஆயிரம் பொதுமக்களை தங்க வைப்பதற்காக ஆயிரம் ஏக்கர் நிலத்தினை நாம் ஏற்பாடு செய்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

2,3 கிழமைகளுக்குள் இந்தப் பணிகள் நிறைவடையும் என எதிர்பார்க்கின்றோம் என்றும் அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸ் கூறியுள்ளார்.

வவுனியாவில் இடம் பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள 13 நலன்புரி நிலையங்களிலும் போதியளவு சுகாதார வசதிகள் இல்லையெனவும் இங்கு தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதென்றும் மனிக்பாம் முகாமில் கடமையில் இருந்த வைத்திய உத்தியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

முகாம்களுக்கு செல்வோர் தொண்டைக் கரகரப்புடன் கூடிய காய்ச்சலுக்கு உள்ளாவதாகவும் உரிய சிகிச்சைகள் இல்லாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (ஓ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### இலந்தை

Botanical Name - Zizyphus jujuba
Family - Rhamnaceae
Engl -Indian jujube
Sing - Ilanda

பல கிளைகளையுடைய 6 மீற்றர் உயரம் வளரக்கூடிய மர்மாகும். இதன் பட்டை சாம்பல் கலந்த மண்ணிறமுடையது. இதன் பட்டையின் உட்புறம் றோஸ் நிறமான நார்த்தன்மையுடையதாக காணப்படும். கிளைகளில் முட்கள் காணப்படும். அநேகமானவை சோடியாகவும் நேராகவும் காணப்படுவதுடன் மற்றவை வளைந்து காணப்படும். இலைகள் 3-6 செ.மீ. நீளமும், 2.5 - 5 செ.மீ அகலமும் கொண்டதுடன் நீள்வட்டம் அல்லது கோள வடிவினதாகும்.

இலை ஓரங்கள் பற்கள் போன்ற அமைப்புடையன. பூக்கள் இளம் பச்சை நிறமுடையன. பழங்கள் முதலில் மஞ்சள் நிறமாகவும், பின் செம்மஞ்சள் நிறமாகவும், இறுதியில் சிவப்பு கலந்த மண்ணிறமாகவும் காணப்படும். ஒரு வித்து பழத்தின் சதையால் மூடப்பட்டிருக்கும்.

**பரம்பலும், இனவிருத்தியும்**

யாழ். மாவட்டத்தில் வளமில்லாத நிலங்களில் பரம்பிக் காணப்படும். விதை மூலமும், மொட்டு ஒட்டு மூலமும் இனப் பெருக்கம் செய்யப்படுகின்றது. இதன் கன்றுகளை ஆடி - ஆவணி மாதங்களில் 8 மீற்றர் X 8 மீற்றர் இடை வெளியில் 60 செ. மீற்றர் X 60 செ. மீற்றர் X 60 செ. மீற்றர் குழிகளில் நட வேண்டும். நட்ட இரண்டாவது ஆண்டிலேயே பழங்கள் கிடைக்கும்.


**100 கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்**

புரதம் 0.8 கிராம், கொழுப்பு 0.3 கிராம், காபோவைதரேற்று 17 கிராம், கல்சியம் 4 மி.கிராம், பொஸ்பரஸ் 9 மி.கி, இரும்பு 1.8 மி.கி, கரோட்டின் 21 மைக் கிராம், விற்றமின் 'C' 76. மி.கி.

**மருத்துவப் பயன்கள்**

✦ புழுக்கள் இல்லாத சுத்தமான பழத்தை கொட்டைகளை நீக்கி பிசைந்து போதியளவு உப்பு, மிளகாய்த்தூள், கூட்டி அடை தட்டிக் காயவைத்து உபயோகித்து வந்தால் வாந்தி, பித்தவாந்தி, அக்னிமாந்தம், கலக்கட்டு முதலியன நீங்கி நல்ல பசி, தீபனம் உண்டாகும்.

✦ இலந்தைப் பழத்தைச் சாப்பிட உடலுக்குக் குளிர்ச்சியையும், உரத்தையும் தரும். மலத்தை இளக்கும். இரத்தத்தை சுத்தப்படுத்தும்.



✦ இலந்தை மரத்தின் கொழுந்து இலையை அரைத்துக் காலை வேளையில் வெறும் வயிற்றில் தினமும் கொட்டைப் பாக்களவு உண்டு பின்பு வெந்நீர் அருந்திவர கடுப்பு, பேதி, வயிற்று எரிச்சல் நீங்கும்.

✦ இலைக்கொழுந்தை மைபோல அரைத்து எலுமிச்சம்பழமளவு எடுத்து மோரில் கலக்கித் தினம் இருவேளை அருந்தி வர மூல நோய்கள் குணமாகும்.

✦ இலந்தை துளிரையும், கட்டையையும் நன்றாய் அரைத்து கொப்பளங்கள் முதலியவற்றிற்கு பூச பழுத்து உடையும்.

✦ பட்டையை உலர வைத்து இடித்துத் தூளாக்கி பழைய புண்களுக்கு தூவிக் கட்டலாம்.

✦ பட்டையையும், இலையையும் சேர்த்து தண்ணீரில் கொதிக்க வைத்து குளிக்க குத்தல், குடைச்சல் நீங்கும்.

✦ இதன் பட்டையை பஞ்சுபோல நறுக்கி 20 கிராம் அளவிற்கு ஒரு மட் குடுவையில் போட்டு 500 மில்லி நீர் விட்டு 60 மில்லி அளவிற்கு காய்ச்சி வடிகட்டி 30 மில்லி வீதம் காலை, மாலை கொடுக்க காய்ச்சலினால் உண்டாகும் அயற்சி சோர்வு தீரும்.

✦ இலையை பாலில் கொதிக்க வைத்து குடிநீராக்கி பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய்க்கு கொடுக்கலாம்.

✦ இலந்தைப் பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் தைலத்தை தடவி வர தோலில் ஏற்படும் கறுப்புப் படைகள் அகலும்.

✦ இதன் வேர்ப்பட்டையை உலர்த்தி, இடித்து, சலித்து 1 கிராம் அளவு வெந்நீரில் உட்கொள்ள மலம் இளகும்.

**இலந்தை அரப்பு**

இதுவும் ஒரு முக்கிய பகுதியாகும். இலந்தையில், அதாவது தண்டுகளில் காணப்படும் ஒரு வகை கூடாகும். இவற்றைச் சேகரித்து உலர்த்தி வெந்நீரில் பிசைந்து குழந்தைகட்கு தலையில் தேய்த்து முழுகிவர குழந்தைகட்கு ஏற்படும் உள்நாக்கு வளர்ச்சி, இலசுனதாபிதம் (Tonsilitis) கொன்னை (பேச்சு தடுமாற்றம்) தீரும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

இலந்தை அரப்பு வைத்து தலை முழுகும் பழக்கம் இன்னும் சில கிராமங்களில் அவதானிக்கப்படுவது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

இலந்தையில் சீமை இலந்தை என இன்னொருவகையுமுண்டு. அதன் பழங்கள் பெரிதாகவும், முட்டை வடிவாகவும் இருக்கும். சீமை இலந்தைப்பழமும் உடலிற்கு குளிர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாகும்.

ஒருவன் கீழே விழுந்தால் இந்த உலகமே அவன் மீது ஓடத்தொடங்கும்.

~ அமெரிக்கா

வலம்புரி

## தமிழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்புக்கு உலக அமைப்புகள் உத்தரவாதம் தரவேண்டும்

வன்னியில் –யுத்தத்தின் பிடியில் அகப்பட்டுள்ள மக்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு வழங்கும் தார்மீகப் பொறுப்பு உலக நாடுகளுக்கு உண்டு.

யுத்த களத்தில் சிக்குண்டுள்ள மக்களைப் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவதற்கான முயற்சியில் உலக அமைப்புகள் ஈடுபட்டுள்ள தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு வன்னி யுத்தகளத்தில் அகப்பட்டுள்ள மக்களைப் பாதுகாப்பான முறையில் வெளியேற்றும் அதேநேரம் அவர்களின் எதிர்காலப் பாதுகாப்புத் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை உலகப் பொது அமைப்புகள் எடுத்தாகவேண்டும்.

தற்போது வன்னி யுத்தகளத்திலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றவர்கள் இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் வெளியாகும் செய்தி அதிர்ச்சியானவையாகவும் வேதனை தருவனவாகவும் உள்ளன.

இத்தகைய செய்திகள் ஆரோக்கியமானவையல்ல.

அதேநேரம் இடைத்தங்கல் முகாம்களில் இருப்பவர்களுடன் அவர்களின் உறவினர்கள் தொடர்பு கொள்வதற்கும் ஏற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுவது கட்டாயமானதாகும்.

இதற்கு முன்னேற்பாடாக இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருப்பவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுவது முதற்பணியாக இருக்கும்.

இவையாவற்றிலும் அரசின் ஒத்துழைப்பு அவசியமானதென்பதற்கு அப்பால், இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்கள் மற்றும் வன்னிப் பகுதியிலிருந்து எதிர்வரும் நாட்களில் அரச கட்டுப்பாட்டுக்கு வரவுள்ளவர்களின் பாதுகாப்பு விடயத்தில் உலகப் பொது அமைப்புகளின் உத்தரவாதம் –கண்காணிப்பு என்பன கட்டாயமானதாகும்.

குறிப்பாக; ஐ.நா. சபை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பனவற்றின் மேற்பார்வையில் –கட்டுப்பாட்டில் இடைத்தங்கல் முகாம்கள் பராமரிக்கப்படவேண்டும்.

இவ்வாறானதொரு முன்னேற்பாடு இல்லாத பட்சத்தில் இடைத்தங்கல் முகாம்களில் உள்ளவர்களின் உயிருக்கான உத்தரவாதம் இல்லாதவொரு ஆபத்தான சூழ்நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# போலித்தனங்களை களைவோம் தியாக பணிகளால் இறைவழி செல்வோம்

## இன்று தவத்தின் பயணத்தின் ஆரம்ப நாள் விபூதிப் புதன்

யேசுவின் பாடுகளின் பயணம் ஆரம்பிக்கும் நாட்களை இன்று பல்வேறு நினைவுகளுடன் கிறிஸ்தவர்கள் தவக் காலத்தை ஆரம்பிக்கும் நாளே விபூதிப் புதன் நாள்.

மனிதனின் பிறப்பும், இறப்பும் மண்ணில் பிறந்து மண்ணுக்கு திரும்பும் நினைவுகளை மீட்டுப் பார்க்கும் நாள் இன்று. "*மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணிற்கே திரும்புவாய்*" என்ற உண்மைப் பொருளை உணர்த்தும் வழிபாடுகள் வாழ்வை சிந்திக்க வைத்து, எம் வாழ்நாளில் நாம் வாழ வேண்டிய வழி முறைகளை வாழ்ந்து காட்டிய இறைமகன் தன்பாடுகளின் பயணத்தை ஆன்மீக தியான வழி முறையில் ஆரம்பித்தார் அன்று.

இன்று செப, தப, தியான வழிகளை மறந்து விழாக்கள் கொண்டாட்டங்களை மட்டும் தமது ஆன்மீக வெளிப்பாடாக்கும் போலித்தனம் களைய இறைமகன் கிறிஸ்து சொல்கிறார்; "மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச் செயல்களை செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத்தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைமாறு கிடையாது" என்கிறார். (மத்தேயு 6-1)

நாற்பது நாட்கள் உபவாசம் இருந்து தம்மை ஆயத்தம் செய்தே சிலுவைப் பயணத்திற்கு ஆயத்தமானார். அந்த ஜெஸ்தமெனித் தோட்டத்தில் தன்னோடு பயணித்த சீடர்களை அழைத்துச் சென்று வழிபட்ட போதும் மனித பெலவீனத்தால் தம்மை மறந்து தூங்கும் சீடர்களிடம் " ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? உங்கள் மனம் ஆர்வமுடையதுதான்; ஆனால் உடல் வலுவற்றது எனவே சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்'' என்ற அழைப்பின் குரலில் இணையும் ஆர்வம் உள்ளவர்களும் தடுமாறி தவறிவிடும் காலத்தில் விபூதிப் புதன் நாள் எமக்கு ஆன்மீக விழிப்பூட்ட அழைக்கிறது.

நல்லவர்களாக வாழ, நற்செய்தி பகிர, நல்ல மனம் கொண்டோராக மாற, நல்ல பணிகள் பல எம் மண்ணில் உண்டு. இன்றைய நாட்களில் துயர் பகிர, துன்பியலில் துவளும் மனித அவலங்களில் கிறிஸ்துவின் பாடுகள் எம்முன் எழும் சவாலாக உள்ளது. காயம்பட்டோர், உடலாலும், உள்ளத்தாலும் துன்புறும் கிறிஸ்துவின் சாயல்களாக எம்மோடு வாழ்கிறார்கள். ஒரு மணிநேரம் விழித்திருந்து நம்பிக்கை ஊட்ட வருவீர்களா? எனும் அழைப்புகளுக்கு செவிமடுப்போமா? அருகில் இருந்து ஆற்றுப்படுத்துவதில், துயர் களைவதில், செப, தப, தியாக பணிகளை செய்வதில் சொந்தம், உறவுகள், நட்புகள் தாண்டி நற்பணிகளால் தவத்தின் காலத்தை அர்த்தமுள்ளதாக்குவோம். எம்மை நாமே தயார்ப்படுத்துவோம்.

இனிவரும் நாட்களில் எமது சலனங்கள், சபலங்கள் எமது வாழ்வுப் பயணத்தை திசை திருப்பாது பயணிக்க சிலுவைப் பாதையின் பயணம் எமது வாழ்வில் நாம் மேற்கொள்ளும் அர்ப்பணமான செயல்களாக எம்மை ஒறுத்து பிறர் துயருக்கான துணைக்கரங்களாக சுய இச்சைகள், ஆசைகளை ஒறுத்து சிலுவையின் பாதையில் சீமோன்களாக மாற தியானிப்போம். தியாக பணிகளால் இறை வழி செல்வோம்.

*செ. யோசப்பாலா*

# மாணவர்களுக்கு சீரான கல்வியை வழங்க புதிய மூன்று நடைமுறைகள்

## ஜி.வி.குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

நடைமுறையில் உள்ள கல்வி முறைமையூடாக சில பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு சீரான கல்வி கிடைப்பதில்லை என கல்வி சார் சட்டமூலத்தை தயாரிக்கும் குழு தெரிவித்துள்ளது.

மாணவர்களுக்கு சீரான கல்வியை பெற்றுக்கொடுக்க தேவையான புதிய மூன்று அணுகுமுறைகளை பின்பற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கல்வி சார் சட்ட மூலத்தை தயாரிக்கும் குழுவின் தலைவர் ஜி.வி.குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், சில பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவருக்கும் முறையான கல்வி கிடைக்கப் பெறுகின்றதா என்பது பிரச்சினைக்குரிய விடயமென்றும் அது குறித்து கவனத்தில் கொள்ளப்படுவது முக்கியம் என்றும் தெரிவித்தார். அத்தகைய மாணவர்களுக்கு கல்வி புகட்டப்படும் முறைமை குறித்தும் அது மாணவர்களுக்கு புகட்டப்படும் பாடங்கள் குறித்தும் அவர்களது நிலை குறித்தும் விசேடமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளதாகவும்,

மேலும் மாணவர்களின் உடல், உள ரீதியான தன்மைகளை நன்கு புரிந்து கொண்டே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்பதில் சிரத்தை செலுத்தப்பட வேண்டுமென்றும் மாணவர்கள் சமூகத்தினருடன் இசைந்து செல்வதற்கும் தொழில் வாய்ப்புகளை பெறுவதற்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுப்பதும் இந்த சட்டமூலம் தயாரிக்கப்படுவதற்கான மற்றுமொரு நோக்கமொன்றும் அவர் தெரிவித்தார். (ஓ-2)

# இலங்கையில் மோதலை நிறுத்த நிரந்தர சமாதானத்தை உருவாக்க உதவ வேண்டும்

## ஒபாமாவுக்கான தமிழ் மக்கள் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெறும் மோதல் சம்பவங்களை முடிவிற்கு கொண்டு வந்து நிரந்தர சமாதானம் ஒன்றைத் தோற்றுவிக்க உதவ வேண்டும் என அமெரிக்காவில் வாழும் ஒபாமாவுக்கான தமிழ் மக்கள் என்ற அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு கடிதத்தில் தற்போதைய ஜனாதிபதி ஒபாமாவிற்கு இந்த விடயத்தில் அறிவுரை கூறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கை பிரச்சினைக்கு சுமுகமான தீர்வொன்றை எட்ட முடியும் என தமிழ் சமூகம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அந்த கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே தாம் கிளின்டனின் ஆதரவாளர்களாக இருந் ததாகவும் தற்போது ஒபாமாவின் ஆதரவாளர்களாக செயற் படுவதாகவும் அமெரிக்க தமிழ் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் இனப் படுகொலையில் ஈடுபட்டு வருகிறது. அகதிகளாக வரும் மக்களை நலன் புரி முகாம்கள் என்ற போர்வையில் தடுப்பு முகாம்களில் வைத்துள்ளதாக இலங்கைத் தமிழர்கள் தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

1948 ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவத்தில் விடுபட்டதும் முதல் தமிழர்கள் இலங்கையில் அடக்கப்பட்டவர்களாகவே நடத்தப் படுகின்றனர்.

அரசாங்கம் மனித உரிமை தொடர்பான சட்டங்களை மதிக்காதமையை மனித உரிமைகள் காப்பகம், எல்லை களற்ற ஊடகவியலாளர் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகளின் இனப் படுகொலை தண்டனை தடுப்பு சம்மேளனம் என்பன ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த நிலையில் இந்தியா இலங்கைக்கு வழங்கும் உதவிகளை நிறுத்த வேண்டும் என சோனியா காந்தியை வலியுறுத்தவும், தமது அதிகாரத்தை பயன்படுத்தி அமெரிக்காவுக்கு மாத்திரமே இலங்கையின் யுத்தத்தை நிறுத்த முடியும் என்பதன் காரணமாகவே தாம் இந்தக் கோரிக்கையை ஒபாமாவிடம் வலியுறுத்துவதாக ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ஓ-5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## மன ஒருமைப்பாட்டின் ஆற்றல்



மனத்தின் ஆற்றல்களை எல்லாம் ஒரு முகப்படுத்தியதால்தானே உலகிலுள்ள அறிவை மனிதன் பெற்றான். எவ்வாறு தட்ட வேண்டும், தேவையான உந்துதலை எப்படி அளிப்பது என்பது ரகசியங்களை அளிக்க தயாராக இருக்கிறது. அதற்கான வலிமையும் வேகமும் ஒருமைப்பாட்டின் மூலமே கிடைக்கிறது. மனித மனத்தின் ஆற்றலுக்கு எல்லையே இல்லை எவ்வளவுக்கு அதை ஒருமைப்படுத்துவீர்களோ அந்த அளவிற்கு ஆற்றலை ஒரு மையத்தில் குவிக்க உங்களால் முடியும். இது தான் ரகசியம் மனப்பயிற்சியில் சுவாசப் பயிற்சி முதற் படி. ஒழுங்கான சுவாசம் உடலைச் சீராக வைத்திருக்கிறது. அதன் மூலம் மனத்தை அடைவது மிக எளிது. சுவாசப் பயிற்சியில் முதலில் நாம் கவனிக்க வேண்டியது ஆசனம். எந்த நிலையில் ஒருவனால் வசதியாக உட்கார முடியுமோ அதுவே அவனுக்குரிய ஆசனம். முது கெலும்பு சுதந்திரமாக இருக்க வேண்டும். உடலின் எடை விலா எழும்புகளால் தாங்கப்பட வேண்டும். மனத்தை அடக்கக் குறுக்கு வழிகள் எதையும் முயலாதீர்கள். சாதாரண சுவாசப் பயிற்சி போதுமானது.

# முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு இரும்புக் கடை வரவேற்பாளர் வேலை

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், தனக்கு வரவேற்பாளர் வேலையை வழங்குவதாகக் கடிதம் வெளியிட்ட இரும்புப் பொருட்களை விற்பனை செய்யும் கடையொன்றுக்கு தனது மறுப்பைத் தெரிவிக்கும் வகையில் வேடிக்கையான விஜயமொன்றை மேற்கொண்டார்.



அக்கடையின் உரிமையாளர், இம்மாத ஆரம்பத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புஷ் தமது கடையில் வரவேற்பாளராக பணியாற்ற மிகவும் பொருத்தமானவர் என வேடிக்கையாகக் குறிப்பிட்டு கடிதமொன்றை தலஸிலிருந்து வெளிவரும் பத்திரிகையில் வெளியிட்டிருந்தார்.

தமது கடையில் வரவேற்பாளர் பதவிக்கான பகுதி நேர வேலை காலியாக இருப்பதாகவும், இதில் இணைந்து கொள்வதன் மூலம் புஷ் தனது வாசிகசாலையில் நேரத்தைக் கழிக்கவும் வெள்ளை மாளிகையில் இரு தடவைகள் பணியாற்றியமை தொடர்பில் எழுதவும் போதிய நேரம் அவருக்கு கிடைக்கும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி கடிதமானது எலியட்ஸ் இரும்புக் கடையில் தலைவரும் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான கைல் வோல்ட் டர்ஸின் கையெழுத்துடன் வெளியிடப்பட்டிருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் உங்களை மிகவும் விரும்புகிறோம். எமது வரவேற்பாளர்களில் அநேகர் அரசாங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்களாவர். அதனால், உங்களுக்குப் புதிய நண்பர்களைத் தேடிக்கொள்ள கஷ்டமாக இருக்காது என அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.


அத்துடன் நீங்கள் இறுதியாக பணியாற்றிய வேலையைவிட உங்களுக்கு மன அழுத்தம் மிகவும் குறைவாக இருப்பதைக் காண்பீர்கள் என நாம் நினைக்கிறோம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மேற்படி வேடிக்கையான கடிதத்துக்கு தனது பிரதிபலிப்பை வெளிப்படுத்தும் முகமாக தனது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சகிதம் அக்கடைக்கு விஜயம் செய்த புஷ், எனக்கு ஒரு வேலை தேவை என கடை முகாமையாளர் அன்ட்றியா பொன்ட்டிடம் கேட்டுள்ளார். இந்நிலையில் அவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சகிதம் ஒரு மணி நேரத்தை கடையில் கழித்து வாடிக்கையாளர்களுடன் உரையாடினார். (ஓ-5)

# சர்வதேச பிரபலம் பெற்ற ஹிலாரியின் பூனை மரணம்

ஹிலாரி கிளின்டன் அமெரிக்க முதல் பெண்மணியாக இருந்த சமயம் சர்வதேச பிரபலம் பெற்று விளங்கிய 'சொக்ஸ்' என்ற பூனை, புற்றுநோய் காரணமாக மரணமடைந்துள்ளது.

1989 ஆம் ஆண்டு பிறந்த இந்தப் பூனை மேரிலான்டிலுள்ள திறீ நொட்ச் மிருக வைத்திய சாலையில் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தது. வாய் மற்றும் தாடைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இந்தப் பூனைக்கு கடந்த நவம்பர் மாதம் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



2001 ஆம் ஆண்டு கிளின்டன் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறியதையடுத்து, பில் கிளின்டனின் முன்னாள் செயலாளரான பெற்றி கரியின் பராமரிப்பில் சொக்ஸ் வளர்ந்தது. எனினும், அப்பூனையை கிளின்டன் தம்பதிகள் அடிக்கடி சென்று பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இந்தப் பூனைக்கென இணையத் தளத்தில் அபிமானிகள் வட்டமொன்று ஏற்படுத்தப்பட்டதுடன், மிருக உரிமைகள் நிகழ்ச்சிகளில் முக்கிய விருந்தினராக இப் பூனை கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# பாகிஸ்தான் இராணுவத்துக்கு அமெரிக்கா பயிற்சி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பதுங்கி இருக்கும் தலிபான் தீவிர வாதிகளை ஒடுக்கும்படி அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது. இதற்காக ஏராளமாக பண உதவிகளையும் செய்து வருகிறது. ஆனாலும் பாகிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்கள் பல்வேறு இடங்களிலும் பரவி வருகிறார்கள்.

இந்த நிலையில் தலிபான் தீவிரவாதிகளை எப்படி ஒடுக்க வேண்டும் என்று அமெரிக்கா இராணுவம் பாகிஸ்தான் இராணுவ வீரர்களுக்க பயிற்சி அளித்து வருவதாக அமெரிக்கா கூறியுள்ளது. 70 அமெரிக்க உயர் அதிகாரிகள் மற்றும் போர் நிபுணர்கள் இந்த பயிற்சியை அளித்து வருகின்றனர். 8 மாதத்துக்கு மேலாக இந்த பயிற்சி நடந்து வருவதாகவும் கூறியுள்ளனர். (ஒ-5)

# நிஜத்தின் முகம்........ நிஜத்தின் முகம்..........

## 'யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களைக் காட்டும் உண்மைச் சம்பவங்கள்'

யாழ்ப்பாணப் பெண்கள் பத்திரிகைவாயிலாகவும் கருத்தரங்குகள் மூலமும் தங்கள் கொள்கைகளையும் எண்ணக் கருத்துக்களையும் காலத்துக்குக் காலம் வெளியிட்டு வருகின்றனர். ஆனால் பெண்கள், வன்முறையிலிருந்து விடுதலைபெறும் பூரண அறிவை அவர்கள் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. மதம், கலாசாரம் போன்றவற்றிலிருக்கும் முரண்பட்ட பழமை வாதங்களை நாம் களைந்தெறிய பின் நிற்கிறோம். பயப்படுகிறோம். ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கூச்சல், கூக்குரல்கள் கூட நமக்குப் பயன்படாது. போலி நியாயங்களையும் பெண்ணை அடிமையாக்கும் கலாசாரப் பண்புகளையும் நாம் மிக ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாகரீகம் வளர வேண்டும் மாறவேண்டும் இந்த ரீதியில் பெண்களைச் சிந்திக்க வைக்க வேண்டும்.

## வாழும் வரை போராட்டமா...

உலகம் முழுவதும் அடக்குபவர்கள், அடக்கப்படுபவர்கள் அனைவருமே தமக்குள் நிகழ்த்தும் அடக்குமுறையாகவும் மனித குல வரலாற்றின் சகல தளங்களிலும் வேரோடிக் கிடக்கும் அடக்கு முறையாகவும் பெண்களின் மீதான வன்முறை காணப்படுகிறது. இத்தகைய அடக்குமுறையை பெண்களின் பின் தள்ளப்பட்ட நிலையை மதங்கள் ஏற்றுக்கொண்டது மட்டுமன்றி ஓர் அந்தஸ்தையும் கொடுத்துவிட்டன. கணவன், வீடு , குழந்தைகள் என்ற மும்முனைச் சூழ்நிலையில் அடக்கியும் விட்டது.

இங்கு கற்பு என்பது பெண்ணுக்குரிய ஒரு பண்பாக இருந்து வருவதை நாம் காணலாம். கணவன் கற்புள்ளவனாக இருக்கத் தவறினால் அது எத்தனை பெண்கள் கற்பு நெறியிலிருந்து தவறுவதற்கு காரணமாக அமைகிறது. என்ற உண்மை ஏன் எவருக்கும் தெரியாமல் போய்விட்டது. ஆகவே ஆணுக்கும் கற்பு நெறி வற்புறுத்தப்படவேண்டும்.

பெண்களின் அன்றாட வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏராளம். விதவைகள், விவாகரத்து செய்யப்பட்டவர்கள், குழந்தைப் பேறு இல்லாதவர்கள் என சமூகத்தில் பல பெண்கள் இருக்கிறார்கள். மனைவியை இழந்த கணவன் தன் பாரம்பரியங்களை இழக்கவே மாட்டான். ஆறு மாதத்தில் திருமணமும் செய்து கொள்கிறான். அவதூறு . இழுக்கு ஒன்றுக்கும் ஆளாகவும் மாட்டான். ஆனால் இதே சமூகம் கணவனை இழந்த பெண்னை எப்படிப் பார்க்கிறது? பெண்ணுக்கு மட்டும் ஏன் இந்த வித்தியாசம்? அவள் பாதுகாப்பிற்காக வேறு திருமணம் செய்ய முற்பட்டால், அதை விமர்சிக்க. அவதூறாகப் [illegible] நகையாட சமூகத்தில் எல்லோரும் முன் வருவார்கள். ஏன் [illegible] சிந்தனை? உணர்ச்சிகளும் ஆசாபாசங்களும் பெண்ணுக்கு [illegible] இருக்கக் கூடாதா? தனது உரிமைகளை இழந்து [illegible] சகோதரர் பராமரிப்பில் அவர்களுக்கும் அவர்கள [illegible] ஏவல் வேலை செய்து சீரழிய வேண்டுமா?

காலம் செல்லச் செல்ல அவள் துக்கம் ஆறுகிறது [illegible] விதவைகள் இன்று ஸ்டிகர் பொட்டும், பலநிறச் சேலைகளும் உடுக்கிறார்கள் இது அவர்களது சொந்த விசயங்கள் இதைப்பற்றி விமர்சிப்பதோ குறைகூறுவதோ அநாகரீகம், மனித குலத்திற்கே ஒரு சாபக்கேடாகும்.

விவாகரத்துச் செய்து கொண்ட ஒரு பெண்ணையும் ஆணையும் சமூகம் வெவ்வேறு கோணத்தில் பார்க்கிறது. விதவைகளும் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களும் வாழாவெட்டிகளாக வாழ்வு இழந்தவர்களாக கருதப்படுவதை இப்படிப் பட்டமளிப்பதை அவர்களின் வாழ்க்கை உரிமை பறிக்கப்படுவதை சமூதாய ரீதியில் பெண்களாகிய நாம் கண்டிக்க வேண்டும். இயற்கையாக ஒரு பெண் இறக்கும் வரை அவளை வாழவிடவேண்டும் அதற்குரிய சூழ்நிலையை சமூகத்தில் மனமாற்றம் என்ற வகையில் பெண்ணுக்கு கிடைக்க வழிவிட வேண்டும் இதை நடைமுறைப்படுத்த பெண்களும் அவளைச் சூழவுள்ளவர்களும் செயல்படுத்த முன் வரவேண்டும்.

இத்தகைய பெண்களை ஒதுக்கி வைக்காமல் அவர்களுக்கு உற்சாக மூட்ட வேண்டும் அதே நிலை தங்களுக்கும் வரும் என்ற நினைவுடன் துணிவும் உறுதியுடனும் செயலாற்ற முன் வரவேண்டும். ஊர் வாயை முதலிலேயே தவிர்த்துவிட்டால் ஊர்வாய் மூடிவிடும் நாம் செய்வதில் எந்த விதப்பிழையுமில்லை. என்ற மன உறுதி இருந்தால் யாரும் யாருக்கும் பயப்படத்தேவையில்லை எனக் கூறிக்கொண்டு இந்த யாழ்ப்பாண மண் ணிலே ஒரு கிராமத்திலே ஓர் பெண்ணுக்கு நடந்த அவலத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் அவளே விபரிக்கிறாள் கேளுங்கள்!.

என் பெயர் வசந்தி நான் வீட்டுக்கு மூத்த பிள்ளை எனக்கு 3 தங்கச்சிமார் உள்ளனர். ஏ.எல். படித்து முடித்த பின் எனக்கு கலியாணம் பேசினார்கள் .ஆனால் சீதனப் பிரச்சினையாலும் தாய் மாமன்களின் பொறாமைக் குணத்தாலும் நாள் வைத்த கலியாணம் குழம்பிப் போய்விட்டது.

என்னாலே வேதனை தாங்க முடியவில்லை. மேற்கொண்டு படிக்கலாம் என்றால் வீட்டு நிலை இடம் கொடுக்க வில்லை. இந்த நேரத்தில் எமது பக்கத்து வீட்டிற்கு புதிதாக வாடகைக்கு வந்த குடும்பத்தவருடன் எனக்கு நட்பு ஏற்பட்டது. அவர்களின் மகன் குமரனுடன் கதைக்கும் வாய்ப்பும் ஏற்பட்டது. அப்போது அவன் தான் காதலித்த பெண் வேறு ஒருவருடன் கலியாணமாகிச் சென்றதால் தான் மிகவும் மனமுடைந்த நிலையிலிருப்பதாகக் கூறிக்கொண்டான். இந்தச் சோக நிலையே நாளடைவில் எமக்குள் காத லை வளர்த்து கலியாணத்தில் கொண்டு வந்து முடிந் தது. ஆரம் பத்தில் இந்தக் கலியாணத்திற்கு என் வீட்டில் எதிர்ப்பு. என்னைவிட ஒரு வயது குறைந்தவர் படிப்பில் குறைந்தவர் என்பதால். எனினும் எனது விடாப்பிடியால் கலியாணம் நடந்தது.



மூத்த மகன் பிறக்கும் வரை வாழ்க்கை சீராகவே இருந்தது. ஒரு வருடத்தின் பின் எனது புருசனின் நடத்தையிலே வித்தியாசங்கள் தெரிய ஆரம்பிச்சுது சினேகிதர்களுடன் அடிக்கடிவெளியே போய் வந்தபின் என்னை வாய்க்கு வந்தபடி பேசத்தொடங்கினார். இதற்கு மாமியும் உடந்தையாக இருந்தார். நாளுக்கு நாள் நல்லா குடித்து விட்டு வரத் தொடங்கினார் தான் வேளை கெட்டு வரும் நேரமெல்லாம் சூடாகச் சமைச்சுப் போடச் சொன்னார். ஒரு நாள் நான் அவர் வரும்போது நல்ல நித்திரை. அப்படியேவெறியில் வந்தவர் ஒருவாளித் தண்ணீரை என் மீது ஊற்றி காலால் உதைத்து எழுப்பினார். பிறகு விடிய விடிய சட்டிபானைகளை என் மீது தூக்கி எறிந்து உறங்கவும் விடாமல் அடித்துக்கொண்டேயிருந்தார். நான் பயத்துடன் வீட்டுக்கோடிக்குள்ளே போய் ஒளித்துக்கொண்டேன்.

அன்றைக்கு எனது தலை உடைந்து பெரிய காயம் அடுத்த நாள் அம்மா வந்து தான் ஆஸ்பத்திரிக்கு கூட்டி போய் மருந்து கட்டி விட்டவா. இப்படியே எனக்கு 3 பிள்ளைகள் பிறந்துவிட்டன. எனக்கு நாளும் பொழுதும் அடி வாங்கி சித்திரவதைப்பட்டதாலே உடம்பும் கெட்டுவிட்டது. கருத்தடை ஒப்பரேசன் செய்யலாம் என இவரிடம் கேட்டேன் அன்று அவரின் வாயிலே இருந்து வந்த பேச்சுக்கள் சொல்லவே கூசுமளவிற்கு கேவலமாக இருந்தன.

நான் ஆம்பிளை எதுவும் செய்வன். எனக்கு தெரியாமல் ஏதும் செய்தால் உன்னை கயித்திலே கட்டித்தூக்குவன் என்று கூறி என்னை தாறுமாறாக அடித்து நொருக்கினார். எனது உதடு கிழிந்து மூக்கும் உடைந்து ஒரு பக்கக் கண்ணும் மூடி நல்லாய் வீங்கிப் போயிருந்தது.

பக்கத்து வீட்டு மனிசன் பார்க்கப் பொறுக்காமல் எனது அம்மாவிடம் போய் சொல்லி அவர் வந்து தான் ஆஸ்பத்திரிக்கு போனேன் ஒரு பக்கப் பார்வை மங்கிப் போனதுதான் மிச்சம் அம்மாவும் அப்பாவும் என்னை நல்லாகத் திட்டினார்கள் . எங்களாலே பார்த்துக் கொண்டு இருக்க ஏலாது விட்டுப் போட்டு வா என்றார்கள் பிள்ளைகளை தாங்கள் பார்ப்பதாகச் சொன்னார்கள்.

ஆனால் நான் மாட்டேன் என்று சொல்லிபோட்டன். ஊர்ச்சனம் என்னைத் தான் பிழை சொல்லும் பிள்ளைகளும் தகப்பனின் முகம் தெரியாமல் வளரக்கூடாது என்றபிடிவாதத்தால் திரும்பவும் இந்த நரக வாழ்க்கைக்கே வந்து விட்டேன். இல்லாவிட்டால் என்ர புருசன் தெருவிலே காணும் போதெல்லாம் ஆக்களுக்கு முன்னாலே போட்டு என்னை அடிச்சுக் கேவலப் படுத்துவார். இதற்குப் பயந்துதான் பேசாமலிருந்தன்.

கொஞ்ச நாளாக வீட்டுக்கும் இரவிலே வராமல் வெளியில் நிற்கத் தொடங்கினார். நான் நினைத்தேன் வெறி கூடிப் போய் எங்காவது விழுந்து கிடப்பார் விடிய வந்துவிடுவார் என்று ஒரு நாள் இவருடன் கூட வேலை செய்யும் ஐயா வந்து சொன்னார் 'பிள்ளை உன்னை என்ர மகளாய் நினைச்சுச் சொல்லுறன். உன் புருசன் செய்யிற கூத்தை ஒருக்கா வந்து பார் என்று " ஒரு வீட்டையும் குறிப்பிட்டுச் சொன்னார் .என்னாலே நம்ப முடியலே நான் மறுத்து விட்டேன்.

ஒரு நாள் நானும் அம்மாவும் ரவுனுக்கு போயிற்று பஸ்ஸிலே வரும்போது தியேட்டருக்கு முன்னால் பஸ் நின்றது. அங்கேயிருந்து என்னுடைய புருசனும் ஒரு பெண்ணும் பஸ்ஸில் ஏறினார்கள் என்னைக் கண்டவுடன் கண்டபடி திட்டத் தொடங்கினார். வீட்டைபோ எல்லாத்துக்கும் வந்து கவனிக்கிறன் என்றபடி அவளுடன் போய் விட்டார்.

எனக்குத் தெரியும் இரவு சூரசங்காரம் தான் என்று என்ன செய்ய என் தலைவிதி இரவு நல்லா தண்ணியடிச்சுப் போட்டு இறைச்சி வாங்கி கொண்டு வந்தார். வந்தவர் 'எங்கேயடி தாயும் மோளும் போட்டு வந்திருக்கிறியள்' நான் இல்லையெண்டால் வீட்டை விட்டு வெளிக்கிட்டுத் திரிவியோ' எனக்கேட்டு என்னுடைய தலையை சுவரோடு மோதி கன்னத்தில் ஓங்கி அடிக்கத் தொடங்கினார். 'நீங்கள் ஆரோடு போனனியள்' என்று நான் கேட்டதற்கு அவள் என்ர ஒன்றுவிட்ட அக்கா உன்னைப் போல நினைச்சிக் கொண்டியா? என்று கட்டில் ரீப்பைத் தடியை கழற்றி காலிலும் கைகளிலும் மாறி மாறி அடித்தார். கைவிரல் முறிந்து நான் சுய நினைவு இழந்து விழுந்துவிட்டேன் எவ்வளவு நேரம் கிடந்தேனோ தெரியாது எழும்பிப்பார்த்தபோது விடிஞ்சு போச்சு பிள்ளைகளும் அழுதபடி நித்திரையில் உளறினார்கள். அன்று அவர் வீட்டை விட்டு போய் 3 நாட்கள் வரவில்லை.

நான் ஒரு முடிவுக்கு வந்தேன். அந்த ஐயா சொன்ன வீட்டிற்கு மூன்றாவது கைக்குழந்தையுடன் சென்றேன். வீட்டிற்கு முன்னாலே கணவரின் சைக்கிள் நின்றது. உள்ளே சென்றேன். கதவு சாத்தியிருந்தது. தள்ளித்திறந்தேன் அங்கே என்னுடைய புருசனும் அந்த ஒன்றுவிட்ட அக்கா(10வயதுமூத்தவர் )வும்... எனக்கு ஒரே அருவெறுப்பாக இருந்தது. என்னைக்கண்டவுடன் பாய்ந்து வந்து பிள்ளையைப் பறித்துக் கொண்டு அடித்து உதைத்து தெருவாலே கலைத்துவிட்டார்.

இந்த நிலையிலே என்ன செய்யுமுடியும் வீட்டை வந்து நித்திரை குளிசை 12 குடித்துவிட்டேன். அதன் பின்னர் சகோதரி கண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று உயிர் பிழைக்க வைத்தார்.

அதன் பின் கணவர் வீடு வந்தாலும் குடும்ப உறவை தொடர முடியவில்லை. இணங்க மறுக்கும் நேரத்தில் மோசமான தாக்குதல் எனது விரும்பமின்றியே பலவந்தமாக என்னை பயன்படுத்திக்கொண்டார். இதனால் 4ஆவது குழந்தையும் பிறந்தது. நாளடைவில் எனது புருசனின் கசிப்புக்கு அடிமையாகி 34 வயசிலே செத்துப் போய்விட்டார்.

6மாதம் அம்மாவுடன் இருந்தேன். உறவி னர் மறுதிருமணம் செய்ய வற்புறுத்தினர். பெற் றோர் வேலைக்குப் போகும்படி கூறினர். எனது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக தையல் நிலையத்தில் வேலை பார்க்கிறேன். யாரையும் தங்கியிருக்காமல் தனித்து வாழப்பழகிக் கொண்டேன். நோய் எனக்கு காலக் கெடு போட்டாலும் பிள்ளைகளை ஆளாக்க வேண்டும் என்று தன்னம்பிக்கையில் வாழுகிறேன்....

ரஞ்சி

இது போன்ற பெண்களும் நம் மத்தியில் வாழத்தான் செய்கிறார்கள். இப் பகுதி சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துமானால் பெண்கள் மறுமலர்ச்சியின் வெற்றிக்கு ஒரு மைல் கல்லாகும்.

''சமூகத்தால், மனிதரால், எங்களால் உருவாக்கப்பட்ட இந்த வன்முறை- சமூகத்தால், மனிதரால் எங்களாலேயே கள்ளயப்பட வேண்டும்''.

மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்

(2099)

## சீனப் பெரும் சுவர் போன்று நிலைத்து நின்று

# யூனிஸ் கான் முச்சதம் விளாசல்; முதல் டெஸ்ட் சமநிலையை நோக்கி

### டெஸ்ட் வரலாற்றில் இரு அணிகளின் தலைவர்களும் இரட்டைச்சதம் அடித்து சாதனை

சீனப் பெரும் சுவர் போன்று நிலைத்து நின்று துடுப்பெடுத்தாடும் அணித்தலைவர் யூனிஸ்கானின் முச்சதத்தின் மூலம் பாகிஸ்தான்



முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை யிழந்து 574 ஓட்டங்களை எடுத்து தோல்வியிலிருந்து மீண்டது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொட ரில் விளையாடுகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 21ஆம் திகதி கராச்சியில் ஆரம்ப மானது.

இப் போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி 7 விக்கெட்டுக்களையிழந்து 644 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது. இதில் மஹேல ஜெயவர்த்தனா 240,திலான் சமரவீர 231 ஓட்டங் களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் டினேஷ் கனேரியா 3 விக்கெட்டுக்களையும் சொகைப் மலிக் 2 விக்கெட்டுக் களையும் உமர் குல்,யசீர் அரபாத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ் தான் அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 296 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய பாகிஸ்தான் அணியை அணித் தலை வர் யூனிஸ்கான் முச்சதம் அடித்து மீட்டெடுத்தார். இதன் மூலம் நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 574 ஓட்டங்களை எடுத்திருந் தது.

இதில் அணித்தலைவர் யூனிஸ் கான் 545 பந்துகளில் (27 பவுண்டரிகள்,4 சிக்ஸர்கள் அடங்கலாக) 306 ஓட்டங்களையும் காம்ரன் அக்மல் 27 ஓட்டங்களையும் எடுத்து ஆட்ட மிழக்காமல் களத்திலிருந்தனர்.

முன்னதாக மலிக் 56,மிஸ்பா உல் ஹக் 42,பைஷால் இக்பால் 57 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் பெர்னான்டோ, மெண்டிஸ், முரளிதரன் மற்றும் மஹேல ஜெயவர்த்தனா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

அத்துடன் குமார் சங்கக்கார டெஸ்ட் கிரிக்கெட்டில் 2ஆவது போட்டியில் நேற்று 4 ஓவர்கள் பந்து வீசினார். இதன் மூலம் பாகிஸ்தான் அணி பொலோன் நிலையிலிருந்து மீண்டு போட்டியை சமனி லைக்கு கொண்டு சென்றது. ஐந்தாவதும் இறுதி நாளான ஆட்டம் இன்றாகும்.

**புதிய சாதனை**

இப்போட்டியில் இரு அணிகளின் தலைவர்களான மஹேல ஜெயவர் த்தனா மற்றும் யூனிஸ் கான் ஆகி யோர் இரட்டைச் சதத்தை பூர்த்தி செய் தனர்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மோதும் இரு அணியின் தலைவர்களும் இரட்டை சதம் பெற் றுக் கொண்டமை இதுவே முதல் தடவையாகும்.

(5)

# சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து நடுவர் பக்னர் ஓய்வு பெறுகிறார்



(கேப்டவுன்)

மேற்கிந்தியத்தீவுகளின் ஸ்டீவ் பக்னர் சர்வதேச நடுவர் பணியிலிருந்து ஓய்வு பெற தீர்மானித்துள்ளார். இதன்படி தென்னாபிரிக்க- அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் கேப்டவுனில் மார்ச் 19-23ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டி யுடன் பக்னர் டெஸ்ட் நடுவர் பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். தொடர்ந்து பார்படோஸில் மார்ச் 27,29ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இங்கிலாந்து-மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான போட்டி கள் பக்னர் பணியாற்றும் கடைசி சர்வ தேச ஒருநாள் ஆட்டங்களாக அமை யும். என்னால் இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு நடுவ ராக பணியாற்ற முடியும். எனினும் இப்போது ஓய்வுபெறும்படி எனது உள்மனது சொல்கிறது.

ஓய்வின் பின்னர் மேற்கிந்தியத் தீவுகளின் இளம் நடுவர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளேன் என்று ஸ்டீவ் பக்னர் தனது ஓய்வு குறித்து தெரிவித்தார். 62 வயதான பக்னர் 1989ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச போட்டிகளில் நடுவராக செயல்பட்டு வருகிறார்.

அவர் இதுவரை 126 டெஸ்ட் போட்டிகளில் நடுவராக செயல்பட்டுள்ளார். இதன்படி அவர் அதிக டெஸ்ட் போட்டிகளில் நடுவராக செயல்பட்டவராகவும் சாதனை படைத்துள்ளார்.

அத்துடன் அவர் இதுவரை 179 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் நடுவராக பணியாற்றியுள்ளார். இதில் பக்னர் 1992ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 5 உலகக்கிண்ண போட்டிகளில் நடுவராக செயல்பட்டுள்ளார். பக்னர் 2002ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.சி.சி. முதன்மை நடுவர் குழாமில் இருந்து வருகிறார்.

எனினும் அவர் அண்மைக் காலமாக சர்ச்சைகளில் சிக்கி வரு கிறார். கடந்த ஆண்டு ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவில் நடந்த டெஸ்ட் போட்டியின்போது தவறான தீர்ப்புக்கள் வழங்கப்பட்ட தால் அந்த தொடரில் நடுவராக செயல்படுவதில் இருந்து அவர் நீக்கப்பட்டார். அதே போன்று கடைசியாக நடந்த உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் அவரது தீர்ப்பு சர்ச்சையை கிளப்பியது. இதன் காரணமாக பக்னர் ஐ.சி.சியின் தண்டனைக்கும் ஆளானார்.

# இந்திய-நியூசிலாந்து அணிகள் முதலாவது இருபது-20 மோதல் இன்று

இந்திய-நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் இருபது-20 போட்டி இன்று கிறிஸ்ட்சேர்ச் நகரில் நடைபெறுகிறது.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி இரண்டு இருபது-20,5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கு பற்றுகிறது. முதல் இருபது-20 போட்டி இன்று கிறிஸ்ட்சேர்ச் நகரில் இலங் கை நேரப்படி பகல் 11.30க்கு ஆரம்பமாகிறது.

இந்திய அணி சமீபகாலமாக சிறப்பாக விளையாடி வருகிறது.

சொந்த மண்ணில் அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளை தோற்கடித்தது. இலங்கையை அதன் சொந்த மண்ணில் தோற்கடித்தது.

இதே சிறப் பாட்டத்தை இந்திய அணி நியூசிலா ந்து மண்ணிலும் தொடரும் என ரசி கர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... (18)





சார்ஜா முக்கோணத் தொடரை அடுத்து இலங்கை அணி 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஹீரோ கிண்ணத்திற்கான ஐந்து நாடுகள் மோதிய ஒருநாள் தொடரில் விளையாடியது.

இதில் இந்திய,மேற்கிந்தியத் தீவுகள்,இலங்கை, தென்னாபிரிக்க மற்றும் சிம்பாவே அணிகள் மோதின. தொடரின் முதலாவது போட்டியில் இந்திய-இலங்கை அணிகள் மோதின.1993ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி கான்பூரில் நடைபெற்ற இப் போட்டியில் முரளிதரன் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதுடன் இலங்கை அணி தோல்வியடைந்தது.

இந்நிலையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி மும்பையில் நடைபெற்ற தொடரின் இரண்டாவது போட்டியில் இலங்கை-மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 268 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 41 ஓட்டங்களைக் கொடுத்து ஆர்தர் ரொன்னை (6) ஆட்டமிழப்பு செய்து ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 269 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டை யிழந்து 222 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 46 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங்களை எடுத்தார்.


**பாலா**

இலங்கை அணி முதலிரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்த நிலையில் தொடரின் 5ஆவது போட்டியில் சிம்பாவே அணியுடன் விளையாடியது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பவே அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை யிழந்து 263 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு 50 ஓவர்களில் 264 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 208 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் முரளிதரன் 18 ஓவர்கள் பந்து வீசி 43 ஓட்டங் களைக் கொடுத்து விக்கெட் எதனையும் வீழ்த்தவில்லை. இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி தொடரில் 2 புள்ளி களைப் பெற்றது. (பயணிக்கும்)

# எண் விளையாட்டு-22



*போட்டிவிதிகள்:* மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எ ண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



## விமான, ஷெல் தாக்குதல்களில்...

12 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 32 பேர் காயமடைந் துள்ளனர்.

த.யசித்தா (வயது 8),செ.புவனேந்திரன் (வயது 27), தி.எறப்பதாஸ் (வயது 45),த. தேசியன், சி.விஜயலட்சுமி (வயது 42), ந.சிறிதரன் (வயது 40), சி.நிருசன் (வயது 15), நா.தவமணிதேவி (வயது 49), த.குயிலன் (வயது 2), இ.துளசிகன் (வயது 5), கி.அருளா னந்தம் (வயது 33),

ச.திலக் (வயது 30), ந.சுதாகரன் (வயது 31),சி.சர்வலட்சுமி (வயது 31), பூ.தேவி (வயது 35), ர.கலைச்செல்வி (வயது 19),ர.உசாநந் தன் (வயது 24), ச.யோகேஸ்வரி (வயது 54), கு.சர்வானநந்தினி (வயது 21), ஜெ.சூரிய மாலா (வயது 25), ப.பவித்திரா (வயது 4), கு.சுரேந்திரன் (வயது 27),

பெ.அமலாம்பிகை (வயது 21), ப.றொ சானி (வயது 13), செ.பரமேஸ்வரன் (வயது 34), செ.தர்மசீலன் (வயது 30), ந.உதயராஜ் (வயது 29), இ.அருந்தவம் (வயது 23), த.பன்னீர்செல்வம் (வயது 36), நா.அருள் ராஜ் (வயது 47), செ.யம்பக் (வயது 16), நா. பகீரதன்(வயது 18) ஆகியோர் படுகாயம டைந்த நிலையில் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இடம்பெயர்ந்த மக் கள் வாழ்விடங்கள் மீது இன்று பிற்பகல் 4.50 மணியளவில் வான் படையின் மிக் - 27 ரக விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 வயதுச் சிறுவன் உட்பட 5 பேர் படு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ரவீந்திரன் வினித் (வயது 4), ரவீந்திரன் வினோஜன் (வயது 14), ரவீந்திரன் மதீனா (வயது 33), டேவிட் ரவீந்திரன் (வயது 38), தவராசா அஜந்தன் (வயது 22) ஆகியோர் உயிரிழந்துள்ளனர். (ச-5)

## பஸ்-மோ.சைக்...

சிவநேசன் (வயது 45) என்பவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக நேரில் சென்று விசா ரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய் மகாதேவா பிரேதப் பரிசோத னைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத் தியசாலையில் ஒப்படைக்குமாறு காரைநகர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். விபத்தின் போது பஸ்ஸைச் செலுத்திய சாரதி பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-7,246)

## அரச தூதுக்...

விளக்கமளிக்கும் நோக்கில் அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவொன்று ஜெனீவாவுக்கு விஜ யம் செய்யவுள்ளது.

மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமர சிங்க தலைமையிலான குழுவொன்று ஐக் கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் கலந்து கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விஜயத்தின்போது சர்வதேச செஞ் சிலுவைச் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட முக் கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத் தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக இடம்பெயர் சிவிலியன்கள் தொ டர்பில் அரசாங்கத் தரப்பினால் மேற்கொள் ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து இதன் போது விளக்கமளிக்கப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது. (ச-5)

## யாழ் பல்கலைக்கழக
## ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் ஒளிப்பதிவு கலையக திறப்பு விழா

யாழ் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஒளிப்பதிவுக் கலையகத் திறப்பு விழா நாளை பிற்பகல் 3.00 மணிக்கு பணிப்பாளர் வாழ் நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஒளிப்பதிவு கலையகத்தை திறந்து வைப்பார்.

போஜோ-டென்மார்க் அரசாங்க ஊடக ஆலோசகர் கலாநிதி ஹென்றிக் குறூநெற், கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.கிருஸ்ண ராஜா மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வரும் மூன்று பத்திரிகைகளினதும் ஆசிரி யர்கள் இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்க ளாக கலந்து கொள்கின்றனர்.

இவ் ஒளிப்பதிவு கலையகத்துக்கான நிதி யுதவியை டென்மார்க் போஜோ நிறுவனம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை ஒளிப்பதிவு கலையகத்தை நிறுவுவதற்கான முயற்சிகளை போஜோ டென்மார்க் அரச ஊடக ஆலோசகர் கலாநிதி ஹென்றிக் குறூ நெற் மேற்கொண்டிருந்தார். (ச)

## இந்தியா மீது தாக்குதல்...

வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பில் விடுதலைப் புலிகள் நடத்திய வான் தாக்குதல்களில் அவர் களின் இரண்டு விமானங்கள் அழிக்கப்பட்ட போதும் இந்தியா மீது தாக்குதல் நடத்தும் பலம் இன்னமும் விடுதலைப்புலிகளிடம் இருப்பதாக சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற் பட வில்லையென தென்னிந்தியாவிலுள்ள விடுதலைப்புலி ஆதரவாளர்கள் இந்திய மத் திய அரசாங்கத்தின் மீது கோபமடைந்துள்ள னர். ஆனால் மக்களை பாதுகாப்பது பற்றி யே தற்பொழுது கவனம் செலுத்தப்படுகின்றது.

இலங்கையின் வடபகுதியிலிருந்து விமா னம் மூலம் பறந்து வந்து கொழும்பில் தாக் குதலை நடத்திவிட்டுத் திரும்பிச் செல்ல விடுத லைப்புலிகளுக்கு முடியுமாயின் இந்தியா விலும் அதேபோல் அவர்களால் தாக்குதல் நடத்த முடியும்.

தாழப்பறக்கும் விடுதலைப் புலிகளின் விமானங்களை அடையாளம் கண்டு கொள் வது மிகவும் கடினம் எனக் குறிப்பிட்ட அவர், இந்தியாவில் 150-170 கிலோ மீற்றர் தூரம் உட் சென்று தாக்குதல் நடத்த முடியும் என அந்த ஊடகத்திடம் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் விடுதலைப்புலிகள் நடத்திய வான் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா வின் தமிழக எல்லைப்பகுதிகளில் வான் பாது காப்பு அதிகரிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது.

இதேவேளை வெறும் 65 சதுரக் கிலோ மீற்றர் கொண்ட சிறிய பரப்புக்குள் முடக்கப் பட்டுள்ள புலிகள் மீண்டும் மூச்சு விடுவதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளை முற்றாக அழித்து ஒழிக்கும் வரை மனிதாபிமான இராணுவ நட வடிக்கைகள் எக்காரணம் கொண்டும் நிறுத் தப்படமாட்டாது.

அதேவேளை புலிகளுடன் எந்தவித மான யுத்த நிறுத்த உடன்படிக்கைகளும் செய்து கொள்ளப்படமாட்டாது என்றும் இரா ணுவத் தளபதி வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பாதுகாப்புப் படையினர் கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து இந்த மனிதாபிமான இராணுவ நடவடிக்கைகளை உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் மேற்கொண்டு வருகின்ற னர்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுவரும் இரா ணுவ நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட முன்னேற்றங்களில் இருந்து தாம் எந்த சந் தர்ப்பத்திலும் பின்வாங்கப் போவதில்லை என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரி வித்தார். (ச-5)

## வன்னியிலுள்ள மக்களைப் பாதுகாக்...

றொய்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள் ளது.

### அமெரிக்கா வலியுறுத்தல்

இதேவேளை இலங்கையின் வடபகுதி யில் நடைபெறும் மோதல் நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டுமென விரும்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அரசியல் ரீதியான திட்டமொன்றிருந் தாலே நாட்டிலுள்ள பலதரப்பட்ட தரப்புக்களி னதும் கேள்விகளுக்கு விடை காணமுடியும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தின் பேச்சாளர் றொபேர்ட் வூட் கூறியுள்ளார்.

மோதல்கள் நிறுத்தப்பட்டு பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதையே தாம் விரும்புவதாகக் குறிப்பிட்ட அவர், மனிதநேய நிலைமைகள் குறித்து அக்கறையுடன் இருப் பதால் அந்த விடயத்தில் உதவிகளைச் செய்ய முடியும் எனக்கூறியுள்ளார்.

மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவ தற்கு எம்மாலான அனைத்து உதவிகளை யும் நாங்கள் செய்வோம். ஆனால் இறுதியில் மோதல்கள் ஏன் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் போன்ற விடயங்களை இரண்டு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தவேண் டும் என வூட் தெரிவித்துள்ளார்.

### இந்தியா அறிவிப்பு

போர் நடைபெறும் பகுதிகளில் சிக்கித் தவிக்கும் அப்பாவித் தமிழர்களை வெளி யேற்ற இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான உதவிகளை வழங்க இந்திய அரசு தயாராக உள்ளது என்று இந் திய வெளியுறவுத்துறை அமைச்சு அறிவித் துள்ளது.

இலங்கையில் போர் நடைபெறும் முல் லைத்தீவு மாவட்டத்தில் சிக்கியுள்ள தமிழர்கள் வெளியேற அனுமதிக்க வேண்டும் என்ற உலக நாடுகளின் கோரிக்கையை ஆய்வு செய்வதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள் ளனர்.

இந்தச் சூழலில் போர் பகுதிகளில் சிக்கி யுள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்று வதற்கான முறையான செயல் திட்டத்தை இலங்கை அரசு வகுக்க வேண்டும் என்று இந்தியா கேட்டுக்கொள்கிறது.

தமிழ் மக்கள் வெளியேறுவதை அனைத் துலக அமைப்புக்கள் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் இதில் அடங்கும் என்று இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விஷ்ணு பிரகாஸ் புதுடில்லி யில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறி யுள்ளார்.

அப்பாவித் மக்களை வெளியேற்றும் போது பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளின் புனிதத் தன்மையை இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பி னரும் மதித்து நடக்கவேண்டும்.

போர் நடைபெறும் பகுதியில் இருந்து மருத் துவ உதவி தேவைப்படும் பலர் ஏற்கனவே கடல் வழியாகக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இன்னும் அதிக எண்ணிக்கையிலானோர் கடல் வழியாகவும், தரை வழியாகவும் பாது காப்பான இடங்களுக்குக் கொண்டு வரப்படு வதை உறுதி செய்ய அரசும், விடுதலைப் புலிகளும் ஒத்துழைக்கவேண்டும்.

அப்பாவித் தமிழ் மக்களைப் பாதுகாப் பான இடங்களுக்குக் கொண்டு வரவும் அதன் பின்னர் அவர்களுக்கு மனிதநேய அடிப் படையில் இடர் உதவிப் பொருட்கள், மருந் துகள், மருத்துவ கவனிப்பு போன்ற உதவிக ளை வழங்கவும் இந்தியா தயாராக இருக்கி றது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற் காக மருத்துவ உதவிகள் மற்றும் மருந்துப் பொருட்களை விரைவில் அனுப்புவதற்கான ஏற்பாடுகள் குறித்து இலங்கை அரசுடன், இந்தியா விவாதித்து வருவதாகவும் வெளியுற வுத்துறை செய்தித் தொடர்பாளர் விஷ்ணு பிர காஸ் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ச-5,14)

## புதுக்குடியிருப்பு பகுதியில்...

முல்லைத்தீவு மாவட்டத்தை முழுமை யாக கைப்பற்றுவதற்காக இராணுவ முன் னெடுப்புக்களில் ஈடுபட்டு வரும் படையினர் நேற்று முற்பகல் புதுக்குடியிருப்பு நகருக்குள் பிரவேசித்துள்ளனர் என்று இராணுவப் பேச் சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை தேவபுரம் கிராமப் பகுதியில் இரு தரப்புக்கும் இடையில் இடம் பெற்ற கடும் மோதலையடுத்து அக்கிராமத்தையும் படையி னர் தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறியதாவது, புதுக்குடியிருப்பு நக ரை சுற்றி வளைத்திருந்த இராணுவத்தின் 5ஆவது, 53ஆவது படையணியினரும் 4ஆவது விசேட படையணியினருமே நேற்று முற்பகல் நகருக்குள் பிரவேசித்துள்ளனர்

தற்போது புதுக்குடியிருப்பு நகருக்குள் நிலை கொண்டுள்ள படையினர் தீவிர சோத னை நடவடிக் கையினை மேற்கொண்டு வருவதுடன் புதுக்குடியிருப்பு பிரதேசத்தை முழுமையாக கைப்பற்றும் முன் நகர்வு முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற னர்.

இதேவேளை பரந்தன், முல்லைத்தீவுக் கிடையிலான ஏ-35 வீதியின் ஊடாக முன் நகர்வு முயற்சிகளை மேற்கொண்டு வந்த இராணுவத்தின் 58 ஆவது படையணியினர் நேற்று முன்தினம் நள்ளிரவு தேவபுரம் கிரா மத்தை தமது முழுமையான கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவந்துள்ளனர்.

குறித்த கிராமத்தை கைப்பற்றுவதற்கென மேற்கொள்ளப்பட்ட இராணுவ முன்னெடுப் புக்களில் 15 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மோதலையடுத்து நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது புலிகளால் பயன்படுத்தப்பட்ட சுமார் 80 அடி நீளமான சப்மரீன் படகொன்று உட் பட வாகனங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள் ளன.

குறித்த பகுதியிலுள்ள விடுதலைப் புலிக ளின் பாதுகாப்பு முன்னரங்குகளின் பாது காப்பை உறுதிப்படுத்துவதற்காக அவ் இயக் கத்தினரால் அமைக்கப்பட்டிருந்த பாரிய மண் மேடுகளை தகர்த்தி குறித்த கிராமத்தை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த 7 தினங்களில் படை யினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் சோத னை நடவடிக்கையின் போது 70க்கும் அதி கமான புலி உறுப்பினர் களின் சடலங்களும் படைத்தரப்பினரால் மீட்கப்பட்டுள்ளன. இத னால் புலிகளுக்கு எதிரான படையினரால் நடத்தப்படும் தாக்குதலில் புலிகள் தரப்புக்கு பெருமளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்ள மை இதிலிருந்து புலனாகிறது

இதே வேளை முல்லைத்தீவின் ஏனைய சில பகுதிகளிலும் படையினருக்கும் விடுத லைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் கள் இடம்பெற்று வருகின்றன. இதில் புலிகள் தரப்புக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ள தாக அவர்களின் தகவல் பரிமாற்றங்களின் போது தெரியவந்துள்ளது என்றார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத் திலுள்ள புதுக்குடியிருப்பு நகரைக் கைப்பற்ற படையினரின் அதி சிறப்புப் படையணிகள் பல முனைகளிலும் மேற்கொள்ளும் படை யெடுப்பை எதிர் கொண்டு விடுதலைப் புலி கள் கடும் சமரில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கடந்த மூன்று நாட்களாக இந்த ஐந்து முனை முன்னேற்றத்தை எதிர் கொண்டு விடுதலைப் புலிகள் நிகழ்த்தும் உக்கிர சண்டையில் ஆகக் குறைந்தது ஆயிரம் படையினர் கொல்லப் பட்டுள்ளது டன் 3000 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என விடுதலைப் புலி கள் தெரிவித்துள்ளதாகவும் செய்தி ஏஜென் ஸிகள் தெரி வித்துள்ளன. (எ-5,14)

லாவண்யா
பல், மூக்குக்கண்ணாடி அகம்
552, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை
யாழ் வீதி,நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)
வடமராட்சி வாடிக்கையாளரின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை தினமும் திறக்கப்பட உள்ளது. மேலும் மூக்குக் கண்ணா டிகள், செயற்கைப் பற்கள், மிதப்பு பற்களுக்கான நிரந்தர கிளிப் அனைத்து விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.
நெல்லியடியில் பார்வையிடும்
நேரம்: காலை 9 - 2 மணிவரை
உரிமையாளர்
DR.றெஜி சொலமன்
(2284)

Become a Professional in Web Development
MCS
Supported By UNDP/JRRP
XHTML CSS, JavaScript ,PHP,MySQL,XML (RSS,Maps)
Dreamweaver,Photoshop,Flash,Server(Apache and IIS)
Domain Registration,Hosting,Control panel,SearchEngine optimize,Google™ (WebMaster tools, AdSense, Adwords)
E-mail marketing, Affiliate marketing, Merchant tools.
Extra: Introduction ASP, JSP
பதிவுகளை 26.02.2009 க்கு முன்பு மேற்கொள்ளவும்.
இணையத்தள வடிவமைப்பில் சர்வதேச அங்கத்துவம்(CIW)
New Batch :26.02.2009 10.00 AM
CIW
விபரங்களுக்கு- 324 Palaly Road, Near Parameswara junction, Bus Root-764

இப்புத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.